பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை

இணைந்து வழங்கும்

# மாணவ/ மாணவியருக்கான வாழ்க்கை வழிகாட்டிக் கையேடு

செ.ம.வேலுசாமி,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600 009.

**வாழ்த்துரை**

**“ எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு”**

என்னும் வள்ளுவனின் பொன்மொழிக்கேற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியர்களும் மேல்நிலை கல்வியில் மேம்பட வேண்டும் என்ற சீரிய சிந்தனையில் 2005-06-ம் கல்வியாண்டில் சுமார் ரூபாய் 90 கோடி செலவில் 4,66,594 இலவச மிதி வண்டிகளை வழங்கி, இந்தியாவிலேயே முதன் முறையாக இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி மாபெரும் சாதனை படைத்துள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்காக இயங்கும் இலவச விடுதிகளை அரசின் சொந்த கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்ற தொலைநோக்கில் சுமார் 761 விடுதிகளுக்கு சுமார் ரூபாய் 235 கோடி செலவில் புதிய கட்டிடங்களை கட்ட ஆணையிட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் **அம்மா** அவர்கள் வரலாறு படைத்துள்ளார்கள்.

கிராமப்புறங்களை அதிக அளவில் கொண்டுள்ள நமது மாநிலத்தில் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பற்றி சிந்தனை ஏதுமின்றி உள்ள நிலையை மாற்றி, அவர்களின் கல்வி, பொருளாதாரம், எதிர்கால வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டுமென எண்ணி மாண்புமிகு தமிழக முதல்வர் **அம்மா** அவர்கள் 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் திறம்பட பங்கேற்க ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி நூல்களை 2003-04-ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நிரந்தரமாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

தற்பொழுது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக மாணவ/மாணவிகளுக்கு வாழ்க்கை வழிகாட்டி கையேடுகளில் உயர்கல்வி தொடர்பான விவரங்களும், வேலை வாய்ப்பிற்கான மத்திய, மாநில அரசுகளின் விவரங்களும் மற்றும் அரசு மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்களும், நடவடிக்கைகளும் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் இவ்வழிகாட்டி கையேடுகளை நன்கு பயன்படுத்தி அதிக மதிப்பெண்கள் பெற்று கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் **அம்மா** அவர்களின் ஆசியுடன் எனது அன்பான வாழ்த்துக்களை மாணவ, மாணவியர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

செ.ம.வேலுசாமி,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

அ.நாகராஜன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலர்

பிற்படுத்தப்பட்டோர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர்
(ம)சிறுபான்மையினர் நலம்
**தலைமைச் செயலகம்,**
**புனித ஜார்ஜ் கோட்டை,**
**சென்னை 600 009.**

**<u>அணிந்துரை</u>**

கிராமப்புறங்களை அதிக அளவில் கொண்டுள்ள நமது நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உயர் மற்றும் மேல்நிலைக் கல்வி முடித்த மாணவ, மாணவியர் அடுத்து படிக்க வேண்டிய உயர்கல்வி பற்றியோ அல்லது தொழில் கல்வி பற்றியோ அதிகம் அறியாத நிலையில் உள்ளனர். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கியும் மற்றும் மதுரை கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் சேர்ந்தும் பயிலும் மாணவ/மாணவியர்கள் மேல்நிலைப்படிப்பு முடிந்ததும், மேற்கொண்டு படிக்க வேண்டிய படிப்புகளைப் பற்றி அறிந்து கொண்டு, தங்கள் எதிர்காலத்தினை சிறப்பாக அமைத்துக் கொள்ள ஏதுவாக “ ஒரிரு தினங்களில் வழிகாட்டுதல் கூட்டம் ” நடத்துவதற்கு, “வாழ்க்கை கல்வி வழிகாட்டிக் கையேடு”, ஒன்று அரசு ஆணை எண் 92, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 19.09.05-ன் படி தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வழிகாட்டி கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் மாணவ/மாணவியர்கள் ஆழ்ந்து அறிந்தும், ஊன்றிப் படித்தும் தங்களது எதிர்காலத்தினை மேம்படுத்திக்கொள்ள அரிய பொக்கிஷமாக இக்கையேடு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன். இக்கையேட்டினைப் படித்துத் தெளிந்து மாணவ / மாணவியர்கள் தங்கள் எதிர்காலத்தில் படிக்க வேண்டிய உயர்கல்வியையும், வேலைவாய்ப்பு பயிற்சியினையும் தேர்வு செய்து பயனடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**அ.நாகராஜன்,**
**அரசு முதன்மைச் செயலர்,**
பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலம்,
சென்னை-600 009.

## முகவுரை

பெருநகரங்கள் மற்றும் நகரங்களில் உயர்நிலை கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி படித்து முடிக்கும் மாணவ/மாணவியர்களால் உரிய வழிமுறைகளை எளிதாகப் புரிந்து கொண்டு தாங்கள் மேற்கொண்டு படிக்கவேண்டிய உயர் கல்வி அல்லது தொழிற் கல்வியை எளிதில் கற்க முடியும். ஆனால் கிராமப்புறங்களில் உயர்நிலை கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி படித்து முடிக்கும் மாணவ/மாணவியர் தாங்கள் அடுத்து படிக்க வேண்டிய உயர்கல்வி பற்றியோ அல்லது தொழில் கல்வி பற்றியோ அறியாத நிலையில் உள்ளனர். இதை நன்குணர்ந்த தமிழக அரசு, கிராமப்புற மாணவ மாணவியரின் வாழ்க்கைத்தரம், கல்வித்தரம் மற்றும் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு "ஓரிரு நாள் வழிகாட்டுதல் கூட்டம்" நடத்துவது குறித்து அரசு ஆணை எண்.92, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 19.9.05ல் ஆணையிட்டுள்ளது.

அதன்படி இவ்வழிகாட்டி கையேடு ஒன்று தமிழக அரசால் நிபுணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி தொடர்பான விவரங்களும், வேலை வாய்ப்பிற்காக மத்திய/மாநில அரசுகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் சிறப்பான பல்வேறு திட்டங்கள், தற்கால கணினி உலகத்திற்கு ஏற்ற கல்வித்திட்டங்கள், தொழிற்சார்ந்த பல்வேறு உயர்கல்வி தொடர்பான விவரங்கள் இக்கையேட்டில் விரிவாக தரப்பட்டுள்ளது.

இவ்வழிகாட்டி கையேட்டினை படித்து நன்கு தெரிந்துகொண்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மிகப்பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை நடத்தும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் தங்கள் எதிர்காலத்திற்கு தேவையான கல்வி, தொழிற்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சிகளை தேர்வு செய்து பயனடைய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

இந்நூல் மாணவர் உலகில் பெரிதும் வரவேற்ப்பு பெறும் என்பதுடன் கிராமப்புற மாணவ மாணவியர்களின் கல்வியில் ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவிக்கும் என நம்புகிறோம்.

இந்நூல் இத்தனை பொலிவுடன் தயாரித்து வெளிவர பெரிதும் உதவிய கீழ்கண்ட நிபுணர் குழுவினரை மனதார பாராட்டுகிறோம்.

1, பேராசிரியர் திரு.ந.சேதுராமன், — தலைவர்
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்,
திறந்தநிலை பல்கலைக்கழகம், சென்னை.

2. திரு.ஜவஉறர் சாந்தகுமார், — உறுப்பினர்
நிகழ்ச்சி இயக்குநர்,
அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி நிலையம்,
சென்னை- 40.

3.திருமதி.எம்.லஷ்மி, — உறுப்பினர்
இணை இயக்குநர்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-600 006.

4.திரு.ந.பசுபதி, — ஒருங்கிணைப்பாளர்
சிறப்பு ஆணையர் (ம) ஆணையரின் நேர்முக உதவியாளர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-600 005.

5. திருமதி.எஸ்.டி.இந்திரா, — ஒருங்கிணைப்பாளர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின்

நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை, சென்னை - 600 005.

மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்ககங்களில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் அனைவரையும் மனதார பாராட்டுகிறோம்.

திரு.மா.தேவராஜ், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும்
ஆணையர்
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலத்துறை
சேப்பாக்கம், சென்னை-5

திரு.ஏ.தசரதன், இ.ஆ.ப.,
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை
சேப்பாக்கம், சென்னை-5

*********

<u>பொருளடக்கம்</u>


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | ஒளிமயமான எதிர்காலம் | 1 |
| 2 | வெற்றியின் ரகசியம் என்ன ? | 2-3 |
| 3 | சரியான படிப்பைத் தேர்வு செய்தல் | 4 |
| 4 | படிப்புக்கு திட்டமிடுவது எப்படி? | 5-8 |
| 5 | பயனுள்ள வகையில் நேரத்தை செலவிடுவது எப்படி.? | 9-10 |
| 6 | போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவது எப்படி? | 11-12 |
| 7 | தன்னம்பிக்கையை வளர்ப்பது எப்படி? | 13 |
| 8 | நேர்முகத் தேர்வில் பங்கேற்பது எப்படி? | 14 |
| 9 | வெற்றிகரமாக சுயதொழில் நடத்துவது எப்படி? | 15 |
| 10 | அரசுப் பணி சில குறிப்புகள் | 16-18 |
| 11 | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 | 19-26 |
| 12 | அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை-40 | 27-29 |
| 13 | சமுதாயக் கல்லூரிகள் | 30-32 |
| 14 | தொழில்துறைக் கல்வி | 33 |
| 15 | மேல்நிலைக் கல்வியில் கற்பிக்கப்படும் தொழிற்பாடங்கள் விவரம் | 34 |
| 16 | இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் சேரத் தகுதிகள் விவரம் | 35-37 |
| 17 | வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்கள் | 38-42 |

## 1. ஒளிமயமான எதிர்காலம்

மேனிலைப் பள்ளிப்படிப்பு ஒரு மாணவருடைய வாழ்க்கையில் முக்கியமான பங்கு வகிக்கிறது. மேனிலைப் படிப்பில் தேர்வு செய்யும் பாடங்களும். அப்பாடங்களில் அவர்கள் பெறும் தேர்ச்சியுமே அவர்களது எதிர்காலத்தை உறுதிசெய்யும்.

10ஆம் வகுப்பில் சிறப்பான தேர்ச்சி பெறுபவர், மேனிலைத்தேர்வில் குறைந்த மதிப்பெண் பெறுவதும், மேனிலைத் தேர்வில் 95 சதவீதத்துக்கும் மேல் மதிப்பெண் பெறுபவ**ர்கள்** முதலாண்டுத் தொழிற்படிப்பில் தடுமாறுவதும் காணப்படுகிறது. இந்நிலைக்கு அடிப்படைக் காரணம், பாடங்களில் நுண்ணறிவு பெற்றிட முயலாமல் தேர்வுக்கு மட்டும் தயாரித்துக் கொள்ளும் முறையை கையாள்வதேயாகும். ஒரு பாடநூலை மட்டும் படிப்பதனால் ஏற்படும் விளைவுதான் இது. எனவே, மேனிலைப் படிப்பின்பொழுது, ஒவ்வொரு பாடப் பகுதியிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிடும் வகையில் படித்தல் அவசியம்.

நமது வாழ்க்கையின் இலக்கு என்ன? மருத்துவம், பொறியியல், வேளாண்மையியல், கணக்கு ஆய்வாளர், அறிவியலாளர், மேலாளர் போன்ற பணிகளில் நாம் விரும்புவதென்ன? என்பதனை உறுதி செய்ய வேண்டும். அவற்றுக்கான தகுதிகள் என்ன? என்பதனையும் நன்கு அறிந்துக்கொள்ள வேண்டும். நமது இலக்கினை அடைந்திடும் வழிகள் மற்றும் என்னென்ன தொழிற்படிப்புகள் உள்ளன என்பதுடன், அவற்றை பயிலுவதற்கான வழிவகைகளையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். மேற்படிப்புக்கான உதவித் தொகைகளின் அளவினையும், அவற்றைப் பெற்றிடும் வழிமுறைகளையும்அறிதல் வேண்டும்.

இந்தியாவில் 200க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகளும் உள்ளன. இவற்றில் 40 லட்சம் மாணவர்கள் சேர்கின்றனர். இப்படி ஏராளமான மாணவர்கள் படிக்க அனுமதிக்கப்பட்டுக் கல்லூரிப் படிப்பினை முடித்தபோதும் தற்போது மூன்றரைக் கோடி பட்டதாரிகள் வேலை இல்லாதவர்களாகப் பதிவு செய்து உள்ளனர்.

18 சதவிகித மாணவர்கள் மட்டுமே பள்ளி முடிந்ததும் கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். இந்நிலையில் அதற்கான தகுதியோ, திறமையோ இல்லாததால் குறைந்த ஊதியமும் பாதுகாப்பற்ற சூழ்நிலையும் உள்ள வேலைகளுக்கு இவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். இதற்குக் காரணம் பலருடைய குடும்பச் சூழ்நிலையும் எதிர்காலத் திட்டமின்மையும் ஆகும்.

## 2. வெற்றியின் ரகசியம் என்ன ?

பிளஸ்டூ இறுதித்தேர்வு பாடம் குறித்த விவாதங்கள், வகுப்புத் தேர்வுகள், மாதிரித் தேர்வுகள், திருப்புதல் தேர்வுகள் என பல்வேறு வகைகளிலும் தங்களை வருத்திக் கொண்டு மாணவர்கள் இறுதித்தேர்வுக்கு தயாராகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தொழிற்கல்விக்கான நுழைவுத்தேர்வை எழுதுகிறார்கள். இத்தேர்வை எதிர்கொள்வதற்கும் மாணவர்கள் எடுக்கும் முயற்சிகள் சிறப்பானவை. தனிப்பயிற்சி, புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து படித்தல், முந்தைய ஆண்டுகளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகளைத் தயார் செய்தல், தினமும் தேர்வு என நுழைவுத் தேர்வுக்கான தயாரிப்புகளும் கடினமானவைகளாக இருக்கின்றன.

இத்தேர்வுகளில் முதனிலை பெறும் மாணவர்கள், எப்படித் தயார்செய்திருப்பர்? அவர்கள் கையாண்ட வழிமுறைகள் என்ன? கடந்த ஆண்டு நடைபெற்ற நுழைவுத்தேர்வில் மருத்துவப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவர் சரவண சிபி, பொறியியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவர் ஸ்ரீராம் இருவரும் பிளஸ்டூ இறுதித்தேர்வுக்குத் தாங்கள் தயாரான விதத்தை விளக்குகின்றனர்.

மருத்துவம், ஐ.ஐ.டி.சென்னை, பிட்ஸ்பிலானி ரூர்க்கி, அண்ணா பல்கலைக்கழகத்தில் பயோடெக்னாலஜி, கம்ப்யூட்டர் சயின்ஸ் என இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிலையங்கள் சரவண சிபிக்காக ஓரிடத்தை ஒதுக்கி வைத்துக் காத்திருந்தாலும், கொடுத்து வைத்ததென்னவோ, அண்ணா பல்கலைக்கழகத்தின் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை தான். இவரைப்போலவே, பல்வேறு புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் இடம் கிடைத்த போதும் அண்ணா பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறையில் சேர்ந்திருக்கிறார் ஸ்ரீராம். இவர்கள் இருவரும் தேர்வுக்குத் தாங்கள் தயாரான விதத்தை விளக்குகிறார்கள்;

**சிபி கூறுகிறார்,** “ +2 பொதுத்தேர்வைப் பொறுத்தமட்டில் பாடப் புத்தகங்களைத் தெளிவாக முழுவதுமாகப் படித்தேன். தனிப்பயிற்சிகளையும் மேற்கொண்டேன். இறுதித்தேர்வுக்கு முன்னரும் நுழைவுத் தேர்வுக்கு முன்னரும் ஏராளமான மாதிரித் தேர்வுகளை எழுதினேன். ஒவ்வொரு பாடத்தையும் சிறு, சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொள்வேன்; அச்சிறிய பகுதிகளிலிருந்து எப்படியெல்லாம் கேள்விகள் கேட்கப்படலாம் என ஊகித்து அதற்கேற்பத் தயார் செய்வேன். அதே போன்று வகுப்புத் தேர்வுகளிலும் மாதிரித் தேர்வுகளிலும் நான் செய்த தவறுகளைத் தனியாக இனம் கண்டறிவதுண்டு. இத்தவறுகளைக் களையும் பயிற்சிகளைச் செய்வேன். ஒரு முறை செய்த தவறு மீண்டும் வராமல் பார்த்துக் கொள்ள இம்முயற்சி எனக்கு உதவியது”.

கணிதம் மற்றும் இயற்பியலில் நேரடியாகக் கேட்கப்படுவதைவிட application side-இல் இருந்து கேட்கப்படும் வினாக்கள் அதிகமாக இருக்கும். இதற்குச் சிறந்த உதாரணம் இந்த ஆண்டு நடைபெற்ற நுழைவுத்தேர்வில் கணிதப்பிரிவுக் கேள்விகளில் பெரும்பாலானவை கடினமாக இருந்தன என்று மாணவர்கள் பலரும் கூறினர். இதற்குக்காரணம் இதுதான், ஒரு கேள்வியை எப்படி அதன் “application side-இல் இருந்து கேட்கலாம் என்பதைப் புரிந்து படித்தால் பிரச்சினையே வராது. மெக்கானிக்கலாகப் படிப்பது நிச்சயமாக ஒத்து வராது”.
சிபியின் கருத்தை ஒட்டியதாக அமைந்துள்ளது ஸ்ரீராமின் எண்ண ஓட்டங்களும்.

**ஸ்ரீராம் கூறுகிறார்;** இயற்பியலுக்குத் தனிப்பயிற்சி வைத்துக்கொண்டேன். ஏனெனில் சிபி கூறியது போன்று இயற்பியலில் குறிப்பாகக் கணக்கீடுகள் பிரிவில் application side-இல் இருந்து கேள்விகள் கேட்கப்படுவதற்கு வாய்ப்பு அதிகம். முந்தைய ஆண்டுகளில் கேட்கப்பட்ட மாதிரி தேர்வுகளை வைத்து வீட்டிலேயே எழுதிப் பார்ப்பேன். இதே முறையைத்தான் நுழைவுத் தேர்வுக்கும் பின்பற்றினேன்”.

குரூப் ஸ்டடி (GROUP STUDY) முறையை இருவருமே ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், ஒவ்வொரு மாணவரின் புரிந்து கொள்ளும் திறனும் வெவ்வேறானது; எனவே ஒத்து வராது. இதற்கு மாறாக, வகுப்பு அல்லது மாதிரித் தேர்வை எழுதிய பின்னர் தேர்வு எழுதும்போது நமக்கு எழுந்த சந்தேகங்களையும், பிரச்சினைகளையும் குறித்து வேண்டுமானால் விவாதிக்கலாம். எனவே குரூப் ஸ்டடி முறையெல்லாம் ஒத்து வராது என்கின்றனர்.

பிளஸ் டூ தேர்வில் சுமார் 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றாலும்கூட தமிழகத்தில் உள்ள அனைத்து விதமான கல்லூரிகளிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை சுமார் 1.5 லட்சம் உள்ளது. எனவே,

பலருக்குத் தாங்கள் விரும்புகிற கல்லூரிகளில் விரும்புகிற படிப்பு கிடைக்காமல் போகச் சாத்தியம் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐ.ஐ..டி. (I.I.T) போன்ற பிரசித்திப்பெற்ற கல்வி நிலையங்கள் குறித்துக் கிராமங்களில் உள்ள பலருக்குப் பள்ளியில் படிக்கும் போதே தெரிவதில்லை. பள்ளியில் படிக்கும் போதே தயாராகி அதில் இடங்களைப் பிடிக்க முயல்பவர்கள் பெரும்பாலும் நகரத்தில் உள்ளவர்கள் தான்.

பிளஸ் டூ படித்து முடித்த மாணவர்கள் கலை, அறிவியல் போன்ற பட்ட வகுப்புகளில் சேர்வதைவிட மருத்துவம், பொறியியல் படிப்புகளில் சேர்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஏனெனில், அப்படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கிறது என்று கருதுவதுதான். பி.பார்ம், டெண்டல், பிசியோதெரபி, நர்சிங் (B.Pharm, Dental, Physiotherapy, Nursing) போன்ற பாடப்பிரிவுகளில் சேரவும் சமீப காலங்களில் மாணவர்களிடம் ஆர்வம் பெருகியுள்ளது.

சமீப காலத்தில் தமிழகத்தில் மிகப் பெரிய அளவுக்குப் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பொறியியல் படிப்புகளில் இடம் கிடைப்பது பெரிய காரியமில்லை. ஆனால், அதிக மதிப்பெண் பெற்றால்தான் அண்ணா பல்கலைக்கழகம் அல்லது அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்கும் அல்லது சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்கும். எஸ்.எஸ்.எல்.ஸி, படித்துவிட்டு பாலிடெக்குனிக்குகளில் டிப்ளமோ படித்த மாணவர்கள், மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்து பி.இ., படிக்க வாய்ப்பு உள்ளது. டிப்ளமோ படித்த மாணவர்கள் பி.இ., இரண்டாம் ஆண்டில் முழு நேர படிப்பில் சேர்ந்து படிக்க உதவும் வகையில் Lateral entry முறையும் தற்போது உள்ளது. இதற்கு நுழைவுத் தேர்வு எதுவும் கிடையாது.

கலை, அறிவியல் கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் சம்பந்தமான படிப்புகளிலும் சேர மாணவ/மாணவிகளிடம் அதிக ஆர்வம் உள்ளது. கலைப் பாடப்பிரிவுகளை எடுத்துப் படித்தாலும் கூட கம்ப்யூட்டர் சம்பந்தமான படிப்புகளையும் படிப்பதில் ஆர்வம் பெருமளவு பெருகியுள்ளது. பேஷன் டெக்னாலஜி போன்ற சிறப்புப் படிப்புகளில் சேர்வதிலும் மாணவர்களிடம் ஆர்வம் அதிகரித்து வருகிறது.

பிளஸ் டூ வகுப்பில் அறிவியல் அல்லாத வேறு பாடப்பிரிவுகளை எடுத்துப் படிக்கும் மாணவர்களைக் கவரக்கூடிய படிப்பாக பி.காம் உள்ளது. இதில் சேர்ந்து படித்துக் கொண்டே சி.ஏ., ஏ சி.சி.எஸ். ஐ சி டபிள்யூ போன்றவற்றில் மாணவர்கள் சேருகிறார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் வேலை வாய்ப்புக்கு ஏற்றவாறு தங்களது தகுதியையும், திறமையையும் வளர்த்துக் கொள்பவர்கள் வேலை வாய்ப்பை வெகு எளிதில் விரைந்து பெறுகிறார்கள். அது போன்ற திறமை இல்லாதவர்கள் வேலை தேடி நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது.

படிப்பிற்கான வாய்ப்புகள் பெருகி வருகின்றன. அதே சமயம் உயர் கல்வி படிக்க விரும்புகின்ற மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்து வருகிறது. எந்தப் படிப்பைப் படித்தாலும் திட்டமிட்டுச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

## 3.சரியான படிப்பைத் தேர்வு செய்தல்

தற்போதைய சூழ்நிலையில் வேலை வாய்ப்புக்கு ஏற்றவாறு தங்களது தகுதியையும், திறமையையும் வளர்த்துக் கொள்பவர்கள் வேலை வாய்ப்பை விரைந்து பெறுகிறார்கள். படிப்புக்கேற்ற வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. எந்த (விதமான) படிப்பை எடுத்துப் படித்தாலும் வெற்றி நிச்சயம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஐ.ஐ.டி. போன்ற புகழ் பெற்ற கல்வி நிலையங்களைப் பற்றி தகவல்கள் கிராமப்புற மக்களுக்கு தெரிவதில்லை. நாள்தோறும் செய்தித்தாள்கள் மற்றும் கல்வி மலர்கள் படிப்பதன் மூலமாக அவர்கள் இது போன்ற கல்வி நிலையங்களை அறியலாம்.

ப்ளஸ் டூ படித்து முடித்த மாணவர்களுக்கு கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல் போன்ற பட்டப் படிப்புகள் தவிர டெண்டல், பி.பார்ம், பிசியோதெரபி, நர்சிங் போன்ற வேலை வாய்ப்பைத் தரக்கூடிய பாடப்பிரிவுகளும் உள்ளன என்பதும் கிராமப்புற மக்களுக்குத் தெரிவதில்லை.

கலை, அறிவியல் கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் சம்பந்தமான படிப்புகள் பயிற்றுவிக்கப்படுவதால் மாணவர்கள் படிக்கும்போதே கம்ப்யூட்டர் வகுப்புகள் தனியாக எடுத்துப் படிக்கலாம். அதன் மூலமாக பட்டப்படிப்பை முடித்தவுடனேயே அவர்களுக்குத் தனியார் துறையில் வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

## 4. படிப்புக்கு திட்டமிடுவது எப்படி?

ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மாணவ / மாணவியர் அடுத்து என்ன படிக்கலாம் என்ற சிந்தனையில் உள்ளனர். அவர்களுக்கு ஏதுவாக தற்போது எண்ணற்ற கல்வி வாய்ப்புகள் உள்ளன. தொழில்நுட்பம், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவத்துறை போன்ற தொழில் துறைக் கல்விகளில், ஓரளவு நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர் சேரும் வாய்ப்பு உள்ளது. தொழிற் கல்லூரிகள் மட்டும் அல்லாமல் பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கிடைக்கும் பட்டங்கள் கூட தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும். வணிகவியல், உயிரியல், உணவு பதப்படுத்தும் துறை, செய்தித்தொடர்புத்துறை, மருத்துவ நிலையச் சேவைத்துறை, விளம்பரத்துறை, சுற்றுலாத்துறை போன்ற பல பட்டப்படிப்புகள் உள்ளன. மாநிலக் கல்வி நிலையங்களிலும், மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் அணுகி தேவையான விவரங்களை சேகரித்து அவரவர்களின் தகுதிக்கேற்றவாறு விண்ணப்பங்களை அளிக்கலாம்.

மேற்கண்டவாறு கல்லூரிகளிலும், பயிற்சி நிலையங்களிலும், நேரடியாகப் பயில வாய்ப்பில்லாதவர்கள் கீழ்கண்ட பல்கலைக் கழகங்கள் மூலம் தொலைத்தூரக் கல்வி முறை மூலம் படிக்கலாம்.

1. **தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம், சென்னை**
2. **சென்னை பல்கலைக்கழகம், சென்னை**
3. **மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், மதுரை**
4. **பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்**
5. **பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி**
6. **பெரியார் பல்கலைக் கழகம், சேலம்**
7. **மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி**
8. **அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி**
9. **அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்**
10. **மதர்தெரசா பல்கலைக் கழகம், கொடைக்கானல்**

தற்போது கல்லூரிகளில் மேற்படிப்புப் படிக்கச் செல்லும் மாணவ, மாணவியர் பட்டம் பெற்றபின் போட்டித் தேர்வுகள் எழுதினால் அரசாங்க வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இருப்பினும் தனியார் நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றவோ தாமாகவே தொழில் தொடங்கவோ கல்லூரிகளில் படிக்கும்போதே தயார் செய்து கொள்ள வேண்டும். சில பாடத்திட்டங்களில் பாடத்திட்டத்துக்கும் மேலாக பல திறமைகளைப் பெற வழிமுறைகளைக் கண்டறிந்து கூடுதல் திறமைகளைப் பெற வேண்டும். எந்தத் துறையாக இருந்தாலும் வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடரவும், இருக்கும் தகுதியுடன் வேலை கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

திட்டமிடுதலும், திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றுதலுமே வெற்றியைத் தரும். பதினோராம் வகுப்பு சேர்ந்த நாள் முதல் முறையான திட்டம் வகுத்து அதன்படி தினமும் குறிப்பிட்ட நேரம் படிக்க வேண்டும். பத்தாம் வகுப்பு வரைப் படிப்பும் எளிமை, தேர்வும் எளிமை. மேனிலைப்படிப்பை அவ்வாறு அல்லாமல் ஒவ்வொரு மணித்துளியும் மேன்மைக்கு உதவும் வகையில் காலத்தை வீணாக்காமல் படித்தல் வேண்டும். செய்முறைப் பயிற்சி செய்வதுடன், உடனடியாக ஏட்டில் எழுத வேண்டும். கடும் உழைப்பும், உயர்ந்த இலட்சியமும் நிச்சயம் வெற்றியைத் தரும்.

பல மாணவர்களிடத்தில் படிப்பு தவிர, விளையாட்டு, ஓவியம், இசை போன்ற பல்வேறு துறைகளில் (Extra Curricular) சிறப்பான திறமைகள் இருக்கும். மேனிலை வகுப்புக்கு வந்தவுடன் படிப்பிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தித் தங்கள் தனித்திறமைகளைப் புறக்கணிப்பது பொதுவாகக் காணப்படுகிறது. அத்திறன்களும் அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கக் கூடும் என்பதை மறக்காமல் இருப்பது நன்று. விளையாட்டில் தனிச்சிறப்புப் பெற்றவர், மேற்படிப்பைத் தொடரவும், நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறவும் வாய்ப்பு உள்ளது. விளையாட்டு வீரர்கள் உதாரணமாகக் கிரிக்கெட் வீரர்கள் / வீராங்கனைகள், சதுரங்க விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள், உறாக்கி வீரர்கள் / வீராங்கனைகள், கூடைப்பந்து வீரர்கள் / வீராங்கனைகள், ஆகியோருக்கு விளையாட்டின் மூலமே பெரிய நிறுவனங்களில் பணி தேடிவருவதைக் காணலாம்.

எத்துறையைத் தேர்ந்தெடுப்பது என்பதில் இந்தப் பருவத்தின் அனுபவம் சரியான பதிலை எல்லோருக்கும் அளித்துவிடாது; எப்போதும் கொஞ்சம் பொறுமையுடனும், கவனமுடனும் இருப்பது

அவசியம். எல்லோருக்கும் தனித்தன்மை இருக்கிறது. அது தனிச்சிறப்பாக மாறும் சாத்தியம் இருக்கிறது. பணிவு, பொறுமை, பக்குவம், விடாமுயற்சி ஆகியவற்றைக் கையாளும்போது வெற்றியை நிச்சயம் பெற முடியும்.

ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மாணவ மாணவியர் அடுத்து என்ன படிப்பது என்ற சிந்தனையில் சிக்கித் தவிக்கின்றனர். இதில் முக்கியமான இரு கட்டங்களில் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது.

பத்தாம் வகுப்பு படித்து முடித்த உடன் அடுத்துப் படிப்பது பற்றிய கவலை பலருக்கும் ஏற்படுகின்றது. தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதும் சுமார் ஏழு லட்சம் மாணவ, மாணவியரில் நான்கு லட்சம் பேர் மட்டுமே, 11, 12 ஆம் வகுப்புகளில் தொடர்ந்து படிக்கின்றனர். சுமார் 3 லட்சம் பேர் பத்தாம் வகுப்போடு படிப்பதை நிறுத்திய பிறகு, தொடர்ந்து பலவிதத் தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்கேற்ற பயிற்சிபெற முயல்கின்றனர். அப்பொழுது அவரவர் ஆர்வத்துக்கேற்பப் பயிற்சி நிலையங்களைத் தேர்ந்தெடுத்துச் செயல் திறமைகளைப் பெறுவது நலம்.

அதையடுத்து பிளஸ் டூ எழுதும் சுமார் 4 லட்சம் பேரில் 2 லட்சம் மாணவ, மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஆர்வம் காட்டுகின்றனர். மாணவ மாணவியருக்கு 9 ஆம் வகுப்பு முதலே மேற்படிப்பு குறித்து வழிகாட்ட அறிவுரை, ஆலோசனை வசதிகள் தேவைப்படுகின்றன. நம் நாட்டில் அத்தகைய வழிகாட்டும் மையங்கள் மிகக் குறைவாக உள்ளதால் மாணவர்களின் மன உளைச்சல் அதிகரிக்கிறது. ஒரு சிலர் அவரது பெற்றோர்கள் அல்லது குடும்பத்தினர், நண்பர்கள் மூலம் அறிவுரை பெறும் வசதி பெற்றிருப்பர். பெரும்பாலோனாருக்கு இவ்வசதி இல்லை. இது குறித்து மாணவர்கள் அணுகும்போது ஒருசில பள்ளி ஆசிரியர்கள் தன்னிச்சையாக அறிவுரை அளிக்க முன் வருகிறார்கள். இதுவும் மிக அரிதாக உள்ளது. எதிர்காலத்தில் பல பள்ளிகளில் ஆசிரியர்கள்-பெற்றோர்களின் கூட்டு முயற்சியாக, பொது அறிவுரை மையங்கள் ஏற்படுத்தலாம்.

மாணவர்களுடைய குடும்பச் சூழ்நிலை மேற்படிப்பு ஆர்வத்தைப் பாதிக்கும். தங்கள் பிள்ளைகள் உள்ளூரிலோ அல்லது அருகில் உள்ள கல்லூரிகளிலோ சிலர் மட்டுமே படிக்க வேண்டும் என்பார்கள். ஒரு சில பெற்றோர்கள் பெண்களாக இருந்தால், அதிக தூரத்தில் உள்ள கல்வி நிலையத்துக்குச் செல்வதைப் விரும்புவதில்லை. பலர் தங்களது ஏழ்மையின் காரணமாக தங்களது குழந்தைகளை அதிகச் செலவாகும் மேற்படிப்புக்கு அனுப்பமாட்டார்கள். மிகவும் திறமையும் ஆர்வமும் உள்ள மாணவ மாணவியர் இத்தகைய குடும்பச் சூழ்நிலையில் சிக்கி இருந்தால், அதை எதிர்கொண்டு தொடர்ந்து அவர்களது விருப்பத்துக்கும் தகுதிக்கும் ஏற்ற படிப்பு எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதை அடைவதற்கு ஏற்ற வழிமுறைகளை காட்ட வேண்டும். ஒரு வேளை தவிர்க்க முடியாத குடும்பச் சூழ்நிலையால் அருகிலேயே படிக்க வேண்டியிருந்தாலும் அதற்கேற்ப உள்ள வாய்ப்புகளை அறிவதற்கு பெற்றோர்கள் வழிவகை செய்யவேண்டும்.

**அரசு பொதுத் தேர்வில் மாணாக்கர்கள் அதிக மதிப்பெண்களை இழப்பதற்கான காரணிகள்**

1. அனைத்து பாடங்களிலும் தொடர்ந்து தயார் செய்யாமை மற்றும் பயிற்சி போதாது இன்மை (Lack of Preparation Practice)
2. தேர்வு நேரங்களில் மன இறுக்கம் /பதற்றம்(Tension)
3. வினாக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தவறான / தொடர்பற்ற விடையளித்தல்
4. தேர்வு அறையினுள் பறக்கும் படையினர் நுழைந்தால்,தேவையற்ற வகையில் பதற்றம் கொண்டு விடைகளைத் தவறாக எழுதுதல்
5. அடுத்த மாணவனைப் பார்த்து விடை எழுதுதல்
6. தெளிவற்ற கையெழுத்து
7. விடை எண்களைச் சரியாக எழுதாமை
8. விடைத்தாள்களைச் சரியாகக் கட்டாது இருத்தல்
9. அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதாமை
10. முக்கியக் கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டாமை

## 5.அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகள்

1. பள்ளிக்கு அனைத்து வேலை நாட்களிலும் வருகை தரல்வேண்டும்
2. வகுப்பறையில் பாடங்களைக் கூர்ந்து கவனித்தல் வேண்டும்
3. ஒவ்வொரு நாளும் நடத்தப்படும் பாடங்களைஅன்றே படித்து மனதில் பதித்துக் கொள்ளவேண்டும்
4. பாடங்களில் ஏற்படும் ஐயப்பாடுகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவுப் படுத்திக் கொள்ள வேண்டும்
5. பாடங்களைப் படிக்கும்போது ஒவ்வொரு பத்தியிலும் உள்ள முக்கியக் கருத்துக்களை **(Key Points)** மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். இக்கருத்துக்களைச் சிறு குறிப்புகளாக நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ளலாம். இது தேர்வு நேரங்களில் திருப்புதலுக்கு **(Revision)** மிகவும் உபயோகமாக இருக்கும்.
6. தேர்வுக்கு முன்பாகப் படிக்கவேண்டிய பாடங்களைக் கால அட்டவணை தயார் செய்து திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். திட்டமிட்டபடி அப்பாடத்தைக் காலம் தவறாமல் படிக்க வேண்டும்
7. பள்ளியில் நடைபெறும் எந்த ஒரு தேர்வையும் (Including Unit Test) தவிர்க்கக் கூடாது
8. வகுப்பறைத் தேர்வில் விடை தெரியாத வினாக்களுக்கு அன்றைய தினமே விடைகளைப் படித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்
9. ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் ஐந்து மணி நேரமாவது படிக்க வேண்டும்

**குறிப்பு:**

**( நடு இரவில் கண்விழித்து படித்தல் கூடாது. ஏனெனில், உடலும் மூளையும் அச்சமயம் சோர்வடைந்து இருக்கும். இதனால் படித்த பாடங்களும் மனதில் தங்காது. மேலும், அடுத்த நாள் பள்ளி நேரத்தில் பாடங்களைக் கவனிக்க உடலும் மூளையும் ஒத்துழைக்காது. )**

10. படிப்பில் பின் தங்கிய மாணவர்கள் அனைத்துப் பாடங்களையும் முழுமையாகப் படிக்க இயலாவிட்டாலும் குறு வினாக்களை ஒன்று விடாமல் அனைத்துப் பாடங்களிலும் தவாறது படிக்கவேண்டும்.

11. படித்த பாடங்களை மறக்காமல் இருப்பதற்கு எழுத்துப்பயிற்சி மிகஅவசியம். கணிதப்பாடத்தை முழுமையாகச் செய்து பார்த்தல் வேண்டும். அறிவியல் பாடங்களில், சமன்பாடுகள் (Equations and derivation) மற்றும் படங்கள் (Diagram) சமூக அறிவியல் வரைபடம் போன்றவற்றிற்கு எழுத்துப் பயிற்சி மிகஅவசியம்.

12. கற்றல் முழுமை அடைய வேண்டும் என்றால் படித்த பாடம் மனதில் முழுமையாகத் தங்க வேண்டும். இதற்குப் பாடங்களைப் படித்தல், எழுதிப் பார்த்தல் மட்டும் போதாது. கற்ற கருத்துக்களை மீண்டும், மீண்டும் நினைவுக்கு கொண்டு வர வேண்டும். (Recollect the point)

13. அரசுத் தேர்வினை எந்தவிதப் பதற்றமும் இல்லாமல் பள்ளியில் நடைபெறும் காலாண்டுத் தேர்வினைபோல் எண்ணி எழுதவேண்டும். குறிப்பாகப் பாடப்புத்தகங்களை மட்டுமே படிப்பதன் மூலம் அனைத்து வகையான வினாக்களுக்கும் பதிலளிக்க இயலும்.

14. பொதுத் தேர்வின்போது இரவு நேரங்களில் அதிக நேரம் கண் விழித்துப் படித்தல்கூடாது.

15. தேர்வு மையத்திற்கு ஒரு மணிநேரம் முன்னதாக வந்து சேர வேண்டும்

16. தேர்வு அறைக்குச் செல்லுமுன், மனதை அமைதியாக வைத்துக் கொள்ளவேண்டும். படித்த பாடங்களை நினைவு கூர வேண்டும். சக தோழர்களுடன் (Friends) தேவையற்ற கருத்து பரிமாற்றம் தவிர்க்கப்படவேண்டும்

17. தேர்வு அறையில் வினாத்தாள் பெற்றவுடன் ஒவ்வொரு வினாவினையும் நன்கு முழுமையாகப் படித்து அதன் பொருளினை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

18. முதலில் நன்கு விடை தெரிந்த வினாக்களைத் தேர்வு செய்து விடை எழுதுதல் வேண்டும்

19. வினாக்களின் எண்களைத் தவறு இன்றிக் குறிப்பிட வேண்டும்

20. முக்கியக் கருத்துக்களை எழுதும் போது பேனாவினால் அடிக்கோடிட்டு எழுதினால் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்புண்டு.

21. விடைகள் அடித்தல், திருத்தல் இன்றி கையெழுத்துத் தெளிவாக புரியும்படி எழுதுதல் வேண்டும்.

22. விடைத்தாளில் குறிப்பிட்ட வினாவிற்குப் பின்னர், விடை எழுதலாம் என்று எண்ணி, விடைத்தாளின் நடுவே காலியாக இடம் விடக்கூடாது.

23. குறிப்பிட்ட நேரத்திற்குள் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

24. விடைகளின் நடுவே தேவையெனில் படங்கள் (Diagram & graph) வரையவேண்டும்.

25. தேர்வு நேரம் முடிய பத்து நிமிடங்களுக்கு முன்பாகவே அனைத்து வினாக்களுக்கும் விடையெழுதி முடித்துவிட வேண்டும்.

26. இறுதியாக, வினாக்களின் எண்கள் சரியாக உள்ளதா என்றும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்றும் சரிபார்த்தல் வேண்டும்.

27. மிகவும் வறுமை மற்றும் இதரப் பிரச்சினைகளுக்குரிய பெற்றோர்களை உடைய மாணவர்கள் மற்றும் மோசமான குடும்பச் சூழல் உள்ள மாணவர்கள் அச்சூழலை மறந்து படிப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகைய இடர்பாடுகளை வெற்றி கொள்ள அமைந்த ஒரு நல்ல வாய்ப்பாக பொதுத்தேர்வினை நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் எதிர்நோக்க வேண்டும்.

## 5. பயனுள்ள வகையில் நேரத்தை செலவிடுவது எப்படி.?

இதை அப்புறம் செய்யலாம் என ஒத்தி போடுவதுதான் நேரம் வீணாவதற்கு முதல்படி. எனக்கு எதைச் செய்யவும் நேரமில்லை என அலுத்துக் கொள்பவர்கள் இப்படி எந்த காரியத்தையும் ஒத்திப் போடுபவர்களாகத்தான் இருப்பார்கள். நீங்கள் அப்படிபட்டவரா? சோம்பேறித்தனம் தான் காரணம் என்றால் சுயகட்டுப்பாடு மூலம் இப்பிரச்சினையைப் போக்கலாம். ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலையைப் பட்டியல் இடுங்கள். அன்று இரவுக்குள் முடித்தாக வேண்டிய வேலைகளை அதன் முக்கியத்துவ அடிப்படையில் வகைப்படுத்துங்கள். பின்னர் திட்டமிட்டபடி முடிக்கப்பாருங்கள்.

ஒவ்வொரு நாள் இரவிலும் படுக்கப் போகும்முன் பட்டியலில் உள்ள வேலைகளில் எந்த அளவுக்கு முடித்திருக்கிறோம் எனப் பாருங்கள். செய்து முடிக்காத வேலைகள் இருந்தால் ( தொடக்கத்தில் அதுபோல அதிகம் இருக்கும்) அந்த வேலையை ஏன் முடிக்க முடியவில்லை என்பதற்கான காரணங்களைப் பட்டியலிடுங்கள். சில காரணங்களில் நியாயம் இருக்கும். பல தவிர்க்கக்கூடியனவாக இருந்திருக்கும். இப்படிச் சரி பார்ப்பதால் வேறொரு உண்மை தெரிய வரும். ஒரு வேலையை முடிக்க நீங்கள் மனதில் கணக்குப் போட்டு வைத்திருக்கும் நேரத்திற்கும் நிஜமாகவே அதைச் செய்து முடிக்க ஆகும் நேரத்திற்கும் உள்ள வித்தியாசம்தான் அது. இந்த அனுபவங்களின் அடிப்படையில் அடுத்த வேலைகளைப் பட்டியல் போடுங்கள். இரவு சரி பாருங்கள். இப்படிச் செய்தால் ஒரு மாதத்திற்குள் நேரம் தவறாமல் காரியங்களைச் செய்ய பழகிவிடலாம். இந்தப் பட்டியலில் தினமும் தொடர்ந்து குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் போகிறதென்றால் அதற்கான காரணம் உளவியல் ரீதியாகவும் இருக்கலாம். அதனையும் கண்டுபிடிக்கப்பாருங்கள். முடியாமல் போனால் உளநல ஆலோசகர்களை அணுகலாம்.

நேரம் எப்படிச் செலவாகின்றது என்பதே எனக்குத் தெரியவில்லை என்று கவலைப்படுகிறபவரா நீங்கள்? அதைக் கண்டுபிடிக்க ஒரு வழி இருக்கிறது. இரண்டு வார காலத்திற்கு ஒரு அட்டவணை தயாரியுங்கள். அதில் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் நீங்கள் செய்யும் வேலைக்குக் குறிப்பிட்ட இடைவெளி விடுங்கள். அந்த ஒவ்வொரு கட்டத்திலும், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் என்ன செய்கிறீர்கள் என்பதை உண்மையாகக் குறித்து வையுங்கள். ஒரு வாரம் கழித்து உங்கள் குறிப்புரைகளைப் பார்த்தால் நீங்கள் அதிர்ந்து போய்விடுவீர்கள். ஏராளமான நேரம் சும்மா செலவிடப்பட்டிருக்கும். உதாரணமாக சாப்பிட ஒரு மணி நேரமாகியிருக்கும். காபி குடிக்க அரைமணி நேரம் செலவிட்டிருப்பீர்கள். இப்படி உங்களுக்கு நீங்களே கொஞ்சம் திட்டமிட்டுக் கொண்டு அடுத்த வாரத்தைக் கழியுங்கள். அட்டவணையைப் பார்த்தால் முன்னேற்றம் தெரியும். அதுபோல் உங்கள் நேரத்தை திருடும் கள்வர்கள் யார்? எவை? என்பதனையும் கண்டு கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி செய்து உங்களது அன்றாடப் பழக்க வழக்கங்களை மாற்றியமைத்தால் நேரத்தை மிச்சப்படுத்த முடியும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி. சிலர் காலை நேரங்களில் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். சிலருக்கு மதிய நேரம்தான் நன்றாக இருக்கும். மாலை நேரங்களில் உற்சாகமாக இருப்பவர் பலர். வேறு சிலருக்கோ இரவு நேரங்களில் தான் வேலை செய்யும் எண்ணம் வரும். இது அவரவர் உடல் கடிகாரம் சம்பந்தப்பட்ட விஷயம். நாம் வேலைகளைச் செய்யத் திட்டமிடும்போது நமது மனநிலை அடிப்படையில் திட்டமிட வேண்டும். கடினமாகக் கருதும் வேலைகளைச் செய்ய நாம் அதிக உற்சாகமாக இருக்கும் தருணங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உதாரணமாக, உங்களுக்கு வேதியியல் பாடம் வேப்பங்காய் மாதிரி என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் முழு உற்சாகத்துடன் படிக்கும் நேரம் மாலைதான் என்றால் அந்த நேரத்தில் அதைப் படிக்கத் திட்டமிட வேண்டும். கொஞ்சம் டல்லாக இருக்கும் நேரங்களைப் பிற பாடங்களைப் படிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நேரத்தை சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்றால் முதலில் செய்ய வேண்டிய வேலைகளை அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

ஏ- அவசரமான முக்கிய வேலைகள்
பி- அவசரமான ஆனால் அதிக முக்கியமற்ற வேலைகள்
சி- முக்கியமான ஆனால் அவசரமற்ற வேலைகள்
டி- அவசரமற்ற முக்கியமற்ற வேலைகள்

இப்படி நான்கு வகையாக வேலைகளை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

நம்மில் பெரும்பாலானோர் ஏ பிரிவு வேலைகளில்தான் அதிகக் கவனம் செலுத்துவோம். நன்றாகக் கவனித்து பார்த்தால் பெரும்பாலான வேலைகள் ‘சி’ நிலையிலிருந்து தான் தோன்றும். ஆனால் அவை ‘சி’ நிலையில் இருக்கும்போது அதைக்கண்டு கொள்வதில்லை. கடைசியில் அது நம்மீது வந்து மோதும்போது அவசர கதியில் அதை முடிக்கப் பார்ப்போம். இதனால் வீணாண டென்ஷன், கோபம், பின் இதிலிருந்து விடுபட ‘டி’ பிரிவு வேலைகளில் ஈடுபடுவோம். இதனால் நேரம் தான் வீணாகும்.

நேரத்தைச் சரியாகச் செலவிடுபவர்கள் சி பிரிவு வேலைகளில் அதிகக் கவனம் செலுத்துபவர்கள் டி பிரிவு வேலைகளை ஒதுக்கி விடுவார்கள். இதன் மூலம் ஏ மற்றும் பி பிரிவு வேலைகளைத் திறமையாகவும் நிதானமாகவும் செய்ய நேரம் கிடைக்கும்.

மாணவப் பருவத்தில் பெரும்பாலான நேரம் பகற்கனவு காண்பதிலேயே போய்விடும். சும்மாவேனும் எதையாவது கற்பனை செய்வது மனதுக்கு சுவாரசியமாக இருந்தாலும் வேலைகளும் படிப்பும் பாதிக்கப்பட்டுவிடும். எனவே, முடிந்தவரை பகற்கனவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

பலருக்கு கவலையே நேரத்தை அரித்துத் தின்று விடும். இது என்ன ஆகுமோ! அது என்ன ஆகுமோ! என்கிற தேவையற்ற பயங்களும் நேரத்துக்கு எதிரிதான். இவைகளுக்கு அடிப்படைக்காரணம் தன்னம்பிக்கைக் குறைவும், தாழ்வு மனப்பான்மையும்தான். நல்லதாகவே நடக்கும் என நம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்நோக்க வேண்டும். அது கொடுக்கும் உற்சாகமும் நிறைய வேலைகளைச் செய்ய ஊக்கம் கொடுக்கும்.

வீணான விவாதங்களில் இறங்க வேண்டாம். வெட்டிப்பேச்சு, விவாதங்கள் போன்றவை நேரத்துக்கு எதிரிகள். அதுமட்டுமல்ல, வீணாண விவாதங்கள் முடிவில் மனக்கசப்பைத்தான் தோற்றுவிக்கும். இது குழுவாகச் சேர்ந்து படிக்கவோ வேலை செய்யவோ முடியாமல் செய்து விடும்.

மற்றவர்கள் பாடங்கள் பற்றிப் பேசுவதை நாம் கவனித்துக் கேட்பதானது நமது நேரத்தைப் பெருமளவுக்கு மிச்சப்படுத்தும். இன்னொருவர் பேசும் போது நாம் வேறு ஏதாவது யோசித்துக் கொண்டிருந்தால் நமது நேரம் மட்டுமல்ல அவரது நேரமும் வீணடிக்கப்படுகின்றது என்பதை நினைவில் வைக்க வேண்டும்

பெரிய வேலைகளைச் சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு செய்யத் தொடங்கினால் அதைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பது எளிதாகவே இருக்கும். அதை முடித்ததும் எளிமையான பகுதியை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றி செய்வதன் மூலம் கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து விட முடியும்.

நேரத்தைச் சரிவரப் பயன்படுத்துவது என்பது வேலைகளைச் செய்யத் தொடங்குவது தான். இப்படிச் செய்வதா அப்படிச் செய்வதா என யோசிப்பதிலேயே நேரத்தை வீணாக்காமல் வேலையைத் தொடங்கிவிட்டால் உடனடியாக அவ்வேலையை எவ்வாறு திறமையாக செய்வது என்கிற விஷயம் புரிபடும். எனவே, காலம் தாழ்த்தாதீர்கள். ஒத்திப் போடாதீர்கள். செயலில் இறங்குங்கள். வெற்றி உங்களுக்கே.

## 6. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவது எப்படி?

போட்டித்தேர்வுகளில் மூன்று கட்டங்கள் உண்டு. ஆதார நூல்கள், குறிப்பேடுகள், இதழ்கள், வினா வங்கிகள், நடந்து முடிந்த தேர்வுகளின் வினாத்திரட்டுகள் போன்ற செய்திகளைத் சேகரிப்பது தான் முதற்கட்டம்.

இவற்றின் அடிப்படையில், குறிப்பேடுகள் தயாரித்தல், வல்லுநர்களோடு கலந்துரையாடி தெளிவு பெறுதல், அண்மையில் இத்தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களை சந்தித்தல், மாதிரித் தேர்வுகள் எழுதுதல் போன்றவைகள்தான் இரண்டாவது கட்டம். தேர்வில் பங்கேற்று திறமையை வெளிப்படுத்துதல் மூன்றாவது கட்டமாகும். இம்மூன்று கட்டங்களுக்கும் வெற்றியில் பங்குண்டு.

ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், அதீதமான அக்கறையும் தேவை. கல்வி நிலையத் தேர்வுகளில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்களைப் பெற்றால், தேர்ச்சி பெற்றிடலாம். ஆனால், போட்டித் தேர்வுகளில் குறைந்த பட்ச மதிப்பெண் என்பது எதுவும் இல்லை. போட்டித் தேர்வுகளில் ஒரு வேலைக்கு 50 இடங்கள் காலியாக உள்ளதாக அறிவிக்கப்படுகின்றன என்று சொன்னால், அந்தத் தேர்வில் முதல் 50 பேர் அதாவது, மதிப்பெண்ணில் முதல் 50 இடங்களைப் பெற்றவர்கள் மட்டுமே பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். **எனவே, நாம் பெறுகின்ற ஒவ்வொரு மதிப்பெண்ணும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் போட்டியாளர்கள் அழுத்தமாக உணர்ந்து செயல்பட வேண்டும்.**

இந்தியக் குடியுரிமைப் பணித் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி) மாநிலத் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம் ( பி.எஸ்.ஆர்.பி ) இரயில்வே தேர்வாணையம், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் காப்பீட்டுக் கழக தேர்வுகள் போன்ற அனைத்துமே போட்டித் தேர்வுக்குள் அடங்கும். இதைதவிர தனியார் அமைப்புகளும் எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வுகளின் மூலமே பணிகளுக்குத் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

போட்டித் தேர்வுகளில் பங்கேற்றிட விரும்பும் மாணவர்கள் அதற்குரிய செயல்பாடுகளை அறிந்து, விரைந்து செயல்பட்டால் வெற்றிக்கனிகள் அவர்கள் மடியில் தவழும். ஆர்வமும், ஆற்றலும் மிக்க தரமான மாணவர்களை இளமையிலேயே இனங்கண்டு அவர்களை ஆசிரியர்கள் வழிகாட்டிட வேண்டும். அவர்களது பெற்றோர்களைச் சந்தித்து அவர்களையும் ஊக்கமூட்ட வேண்டும்.

போட்டித் தேர்வுகளுக்குத் பொதுவாக மொழி அறிவு ( ஆங்கிலம் அல்லது தமிழ்) கணித அறிவு, பொது அறிவு ஆகிய மூன்றில் அதிக அக்கறை காட்டி, சீரான வளர்ச்சியினைத் தொடர்ந்த பயிற்சிகள் மூலம் பெற்றிட வேண்டும். வெற்றிக்கு இதுவே வித்திடும். மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள கல்வி நிறுவன நூலகங்களையும் பொது நூலகங்களையும் இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். கல்வி நிறுவனங்கள் அல்லது மற்ற நிறுவனங்கள் நடத்தும் கருத்தரங்குகளில் பங்கேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தவறாது செய்திதாள்களை, போட்டி தேர்வுக்கான சிறப்பிதழ்களை வாசிக்க வேண்டும். ஒரு பதிவேட்டில் சிறப்புக் குறிப்புகளை குறித்துக் கொள்ளவேண்டும். கவனத்தை ஈர்க்கும் கட்டுரைகளை நகலெடுத்துக் கொள்ள வேண்டும்.

துறை சார்ந்த பருவ இதழ்களைக் கண்டிப்பாகத் தொடர்ந்து படிப்பதோடு, ஐயங்கள் எழுமானால் துறையாசிரியர்களை அணுகி, தீர விளங்கிக் குறிப்பேடுகள் தயார் செய்து கொள்ள வேண்டும்.
பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கேற்ப மூல நூல்களைப் படிப்பதோடு அவ்வப்போது அத்துறை ஆய்வு முடிவுகளையும் அறிந்து அதற்கேற்ப குறிப்பேடு தயார் செய்து கொள்ள வேண்டும்.

போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறப்பான தேர்ச்சி பெற்றவராகத் திகழ்வது இயல்பு. சக பயிற்சியாளர்கள் இவரது ஆற்றலைக் கலந்துரையாடல்கள் மூலம் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால், காலவிரயம் தவிர்க்கப்படுவதோடு தெளிவான கருத்துப்பதிவும் கிட்டும். டெல்லி, சென்னை, அலஹாபாத், சண்டிகர் போன்ற நகரங்களில் இம்முறையில் பலர் பயன்பெறுகின்றனர்.

தேர்வு எழுத விழைவோர், தாங்கள் எழுத விழைகின்ற தேர்வுக்காகப் பயிற்சி பெறுகின்றவர்களையும், இயலுமானால் இத்தேர்வுகளை அண்மையில் எழுதி வெற்றி கண்டவர்களையும் ஆரம்ப காலத்திலேயே நாடிச்சென்று கலந்துரையாடி, வழிமுறைகளை நன்கு தெரிந்து தெளிவு பெறவேண்டும். இச்செயல் போட்டித் தேர்வுகளில் விரைவில் வெற்றி பெற்றிட ஒளிமயமான வாய்ப்புகளை உருவாக்கும் என்பதில்

ஐயமில்லை. டெல்லி, சென்னை, அலஹாபாத், சண்டிகர் நகரங்களில் இப்பயிற்சிகள் நடைமுறையில் உள்ளன. கடந்த பல ஆண்டுகளாகப் பல பயிற்சியாளர்களுக்குப் பயிற்றுவித்துவரும் ஆசிரியர்களை ஆரம்பகாலம் தொட்டே இனங்கண்டு, அவர்களது அறிவுரைகளைப் பெற வேண்டும். **Year Book, NCERT Books, NBT Books** இவற்றைச் தேடி கண்டுபிடித்து படித்துப் பயன் பெற வேண்டும்.

மொழி அறிவினைப் பொருத்தவரை சிறப்புக்கவனம் செலுத்த வேண்டும். தொடர்ந்து ஆங்கில நூல்களை வாசித்துப் பழகிக் கொள்ள வேண்டும். சொல்திறனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். சொந்தமாகக் கட்டுரை எழுதப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். புதிய சொற்களைக் காணுந்தோறும் அகராதியைத் தொடர்பு கொள்ள வேண்டும். பயிற்சியும் முயற்சியும் இருந்தால் மொழி வளர்ச்சி கட்டாயம் ஏற்படும். பள்ளிப்பருவம் தொட்டே சரியாகப் பேசவும், எழுதவும், பழகிக் கொள்ள வேண்டும். எவ்வளவு தான் துறையறிவு இருந்தாலும், அவற்றை வெளிப்படுத்துவதற்குத் துணைபுரிவது மொழி ஒன்று தான். எளிமையான பிழையற்ற வாக்கியங்களைத் தெளிவாக எழுவதிலும், பேசுவதிலும் வெற்றியின் வித்து அடங்கியிருக்கிறது.

தமிழக மாணவர்கள் பலர் மொழியாற்றலைப் போதிய அளவு பெறாத காரணத்தால் வெற்றி வாய்ப்பினை நழுவ விடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில் மட்டுமின்றி தமிழிலும் இந்நிலைதான். இந்நிலை அடியோடு மாற வேண்டும்.

போட்டித் தேர்வுகளில் இறுதிக்கட்டம் நேர்முகத் தேர்வு; போட்டியாளர்களின் ஆளுமைதான் இங்கே சோதிக்கப்படுகிறது. நேர்முகத் தேர்வு குறுக்கு விசாரணை அல்ல, சுருங்கச் சொன்னால், இது சுமூகமான கலந்துரையாடல் தான்.

## 7. தன்னம்பிக்கையை வளர்ப்பது எப்படி?

வெற்றி என்பது எது பலன் தராது என்பதைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல, எது பலன் தரும் என்பதைக் கண்டு அறிவதும் தான்.

வெற்றிப் படிக்கட்டுகளில் வீறுநடை போடத் தேவை தன்னம்பிக்கை. தன்னைப் பற்றியும் தனது திறமைகளைப் பற்றியும், தனது பலத்தைப் பற்றியும், பலவீனத்தை பற்றியும், சரியாக மதிப்பீடு செய்வதால் உருவாகும் நம்பிக்கை இது.

தன்னம்பிக்கை உள்ளவர்கள் தங்களையே குறைகூறிக் கொண்டிருக்க மாட்டார்கள். அதைப் போலவே தங்களைப் பற்றியும் தங்களது சாதனைகளைப் பற்றியும் சுயபுராணம் பாடுவதை ஒரு கலையாகக் கொண்டிருக்க மாட்டார்கள். தன்னம்பிக்கையைக் குழந்தைப் பருவத்திலேயே வளர்க்க முடியும். குழந்தைகளைச் சுதந்திரமாக வளரவிட்டு அவர்களுக்கு இளம் பருவத்திலேயே தன்னம்பிக்கையையூட்டி அவர்களை வளர்க்க முடியும். குழந்தைகளைச் சுயமாக **எதையும் செய்யவிடாமல் யாருடனும் பழகவிடாமல் கட்டுக்குள்ளேயே வளர்ப்பது நாளடைவில் அக்குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை இல்லாமல் தாழ்வு மனப்பான்மை உருவாக வழி ஏற்பட்டுவிடும்.**

முடிவு எடுக்கத் தயங்குபவர்கள், மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு சுயபுத்தியைச் செலுத்தி முடிவெடுக்காதவர்கள். தங்களது முடிவுகளுக்கு மற்றவர்களின் அங்கீகாரத்தை தேடுபவர்கள். தாங்கள் எடுத்த முடிவை அமல்படுத்தத் தயங்குபவர்கள், பெரும்பாலும் தன்னம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பார்கள். யாரிடமும் ஆலோசனை கேட்கலாம். எந்தக் கருத்தையும் பரிசீலித்துப் பார்க்கலாம். ஆனால், முடிவு உங்களுடையதாக இருக்க வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களில் சுய சிந்தனையுடன் முடிவெடுக்கும் பழக்கம் வந்தால், பெரிய விஷயங்களிலும் சுய சிந்தனையுடன் முடிவு காண்பது எளிது. தன்னம்பிக்கை மனதில் இருந்தால் மட்டும் போதாது, செயலிலும் பிரதிபலிக்க வேண்டும்.

இதுவரை, செய்து வந்த காரியத்திலிருந்து விலகி, புதிய விஷயங்களில் ஈடுபாடு கொள்ளும் மனம் உற்சாகம் கொள்கிறது. புத்துணர்ச்சி பெறுகிறது. மற்றவர்களின் சுக, துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டு அவர்களுக்கு யோசனைகளைக்கூறி உதவுவது நம்மிடம் படிப்படியாகத் தன்னம்பிக்கையை வளர்க்கும். அதுபோன்ற பிரச்சினைகள் நமக்கு வரும் போது அவற்றை எளிதாக எதிர்கொள்ள முடியும்.

## 8. நேர்முகத் தேர்வில் பங்கேற்பது எப்படி?

நேர்முகத் தேர்வில் பங்கேற்கும் மாணவர்களுக்குச் சில யோசனைகள்:

- ❖ நேர்முகத் தேர்வுக்குத் தாமதமாகச் செல்லக் கூடாது. சரியான நேரத்திற்கு செல்லுங்கள்.
- ❖ அழுத்தமான நிறத்தில் உடை அணிவதைத் தவிர்க்கவும். இறுக்கிப்பிடிக்கும் உடைகளை அணியாதீர்கள். தூய்மையான ஆடைகளை அணிந்து செல்லுங்கள். தலைமுடியை நன்கு வாரியிருக்கிறீர்களா என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள்.
- ❖ தலையில் தொப்பி அணிபவராக இருந்தால் அதைக் கழற்றி கையில் வைத்துக் கொள்ளுங்கள். கறுப்பு, நீலம், பச்சை நிறக்கண்ணாடிகளை அணியாதீர்கள்.
- ❖ வாயில் சூயிங்கம், பாக்கு போன்றவற்றை மென்று கொண்டு செல்லாதீர்கள்.
- ❖ அறைக்குள் சென்றதும் தேர்வாளர்களுக்கு வணக்கம் சொல்லுங்கள். இருக்கையின் மீது தாவி அமராதீர்கள். இருக்கையில் அமரச் சொல்லும் வரையில் காத்திருங்கள்.
- ❖ கேட்கப்படும் வினாக்களைக் கவனமாகக் கேளுங்கள். சுருக்கமாகப் பதில் அளியுங்கள். எதிரே உள்ள மேசையைப் பார்த்தபடி பதிலளிக்காமல் கேள்வி கேட்பவரை நேர்முகமாகப் பார்த்து பதில் அளியுங்கள்.
- ❖ கேள்வியை முழுமையாக விளங்கிக் கொள்ளுங்கள். அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் அளிக்க முயலுங்கள். குரலில் தன்னம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் பதில் அளியுங்கள்.
- ❖ நல்ல மொழி நடையைக் கையாளுங்கள். தெளிவாகப் பேசுங்கள். தேவைக்கு அதிகமாகப் பேசாதீர்கள். உண்மையான பதிலை உள்ளத்திலிருந்து சொல்லுங்கள். தன்னம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் பதில் அளியுங்கள்.
- ❖ அந்த வேலை உங்களுக்கு எவ்வளவு முக்கியம் என்று காட்ட முயலாதீர்கள். மாறாக, அந்த வேலைக்கு எவ்வளவு அதிகபட்ச திறமைகள் உங்களிடம் உள்ளன என்பதைக் காட்ட முற்படுங்கள்.
- ❖ நேர்முகத் தேர்வு செய்பவர்களிடம் வாதிட முயல வேண்டாம். நிதானத்தைக் கடைபிடியுங்கள்.
- ❖ விண்ணப்பித்திலுள்ள வேலையின் மீது உங்களுக்குள்ள விருப்பத்தைத் தெரிவியுங்கள். அந்த வேலை உங்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைவிட அந்த வேலைக்கு எந்த அளவுக்கு நீங்கள் பொருத்தமானவராக இருக்கிறீர்கள் என்பதை வெளிபடுத்தவும்.
- ❖ தேர்வு முடிந்ததும் தேர்வுக் குழுவினருக்கு நன்றி கூறிவிட்டு வெளியில் வர வேண்டும்

## 9. வெற்றிகரமாக சுயதொழில் நடத்துவது எப்படி?

எந்தப் பொருளை உற்பத்தி செய்ய வேண்டும், எந்த பொருளுக்கு சமூகத்தில் வரவேற்பு இருக்கும் என்பதைத் தொழில் முனைவோர் கவனித்துக் கண்காணித்துத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்.

புதிய உற்பத்தி முறைகள், சந்தையில் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு விற்பனைக்கு வரும் இயந்திரங்கள், சாதனங்கள், மூலப்பொருள்கள், உதிரிபாகங்கள் பற்றிய இன்றைய நிலவரங்களை அறிந்து பயன்படுத்தும் ஆற்றலும், தெளிவும், ஞானமும் உள்ளவராக இருக்க வேண்டும்.

நுகர்வோரின் மனப்பாங்குக்கு ஏற்றவாரும், திருப்தி அளிக்கும் வகையிலும், பொருட்களின் உருவ அமைப்புகளை மாற்றி அமைக்கவும், அவைகளை நல்ல முறையில் நவீன அமைப்பில் பேக் செய்து அனுப்புவது குறித்தும் தெரிந்திருக்க வேண்டும்.

எந்தத் தொழிலிலும் பல்வேறு சூழ்நிலைகளாலும், காரணங்களாலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும். இவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு தொழில் முனைவோரும் ஓரளவு துணிந்து தன்னம்பிக்கையுடனும், கவனத்துடனும் நிர்வாகம் செய்ய வேண்டும்.

பெரும்பாலனவர்களுக்கு நிறைத் திட்டங்கள், யோசனைகள், ஞானம், என்ன செய்தால் நல்லது என்று எல்லாம் தெரியும். இருந்தாலும் துணிச்சலாக முடிவெடுக்கத் தயங்குகிறோம். காரணம், எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டால் அவைகளைச் சமாளிக்கும் தன்னம்பிக்கை இல்லை.

தொழில் முனைய வேண்டும் என்று ஒருவர் முடிவு எடுக்கும்போது, அவர் நன்றாக ஞாபகத்தில் கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. எந்த ஒரு தொழிலிலும், வேலையிலும் எதிர்பாராத விதமாக ஏதாவது தடங்கல்கள் இருக்கத்தான் செய்யும். நினைத்தபடி தடையின்றி நடந்துவிடாது. இதை மறக்கக்கூடாது. எந்த அளவு சிக்கல்கள் வரலாம். எப்படி அவற்றைச் சமாளிப்பது என்பதை எதிர்நோக்கியிருந்தால் அச்சம் ஏற்படாது. தொழிலை வெற்றிகரமாகவும் நடத்த முடியும்.

ஏட்டில் இருக்கும் திட்டங்களை நடைமுறையில் செயல்படுத்த ஆர்வம், உந்துதல், ஊக்கம், தன்னம்பிக்கை வேண்டும். கண்ணும் கருத்துமாக ஒவ்வொரு தகவலையும், நடைமுறையில் பார்த்துத் துல்லியமாகக் கவனித்து நடத்திச் செல்லும் மனோதிடம் தேவை. நடுவழியில் மனம் தளர்ந்து விடக்கூடாது.

நம் வாழ்க்கையின் எந்த ஒரு காரியமும் எடுத்த எடுப்பிலேயே முதல் முறையிலேயே நினைத்தபடி நடந்துவிட்டது என்று கூற முடியாது. எந்த ஒரு தடங்கல் வரும் போதும்,அதைச் சமாளித்துச் சரிபடுத்தும்போது புதிய ஆற்றல், தன்னம்பிக்கை பிறக்கும். விடாமுயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம்.

அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வரட்டும் என்று பலர் எதிர்பார்க்கிறார்கள். இது வாழ்க்கையில் முன்னேறுவதற்கான ஏற்ற பண்பு இல்லை. தொழில் முனைவோர் இப்படி கனவு காணக்கூடாது. மக்கள் தொகைக் கட்டுக்கு மீறிப் பெருகி வரும் இந்நாளில், பண்டங்கள், சேவைகளின் தேவையும் பெருமளவில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எதைத் தேர்ந்தெடுத்துச் செய்தால் மக்கள் விரும்பி வாங்குவார்கள் என்பதை ஆராய்ந்து உணர்ந்து அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

புதிய அணுகுமுறைகள், பொருட்கள், தேவைகள், சேவைகள், கண்டுபிடிப்புகள் போன்றவை குறித்து, தொடர்ந்து விழிப்புடன் தகவல்களைத் தெரிந்து கொண்டு இருக்க வேண்டும். தான் நடத்தும் தற்போதைய தொழிலுக்கு மட்டும் என்று கருதாது மக்களின் தேவைக்கு அதிக அளவில் பயன்படும் என்று கருதினால், புதிய தொழிலுக்கு உதவும். தங்களால் தகவல்களைத் திரட்ட முடியாவிட்டாலும் அதற்கென உள்ள சேவை நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதையெல்லாம் செலவாக நினைக்காமல் தொழிலுக்கான முதலீடு என்று கருத வேண்டும். எனினும் நுகர்வோர் தம் பொருட்களை எப்படி விரும்புகிறார்கள், விற்றபின் தொடர்ந்து சேவை பெறுகிறார்களா, பொருட்கள் கெடாமல் பயன்படுகின்றனவா, உருவமைப்பு, பாகங்கள் போன்றவைகளை மாற்றி அமைக்க வேண்டி வருமா என்பன போன்ற தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.

## 10.அரசுப் பணி சில குறிப்புகள்

கடந்த பக்கங்களில் பள்ளிப் படிப்பு முடிந்தபின் எத்தகைய மேற்படிப்புக்குச் செல்லாம் அல்லது எத்தகைய பணிக்குச் செல்லாம் என்பதற்கான தெளிவான அறிவுரைகளை படித்தீர்கள். வரும் பக்கங்களிலே குறிப்பாக, அரசுப் பணியில் சேர்வது எப்படி, அப்பணி எத்தகையது? அப்பணியில் சேர்வதற்கு என்ன தகுதிகள் வேண்டும்? அரசுப் பணியில் சேர்வதில் நன்மைகள் என்ன? போன்ற விவரங்களை நாம் தெரிந்து கொள்வோம்.

ஒவ்வொரு மாணவ/மாணவியரும் தங்களது எதிர்கால வாழ்க்கையை அமைப்பதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். "உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்", " முயற்சி திருவினையாக்கும்", "ஊக்கமது கைவிடேல்", " தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" போன்ற முதுமொழிகளை எப்போதும் கருத்தில் இருத்திக் கொள்ளுதல் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

ஒவ்வொரு மாணவ, மாணவியரும் தங்கள் வாழ்வுக்கு ஒரு இலக்கு அமைத்துக் கொள்வது மிக அவசியமாகும். இந்த இளமையான நாட்களில் கருத்தாய் படிப்பது பசுமரத்தில் ஆணி அறைந்தது போல் நினைவில் பதிவாகிறது என்பதை நீங்கள் அறிவுபூர்வமாக உணர்வீர்கள். எனவே, இந்த வயதில் ஊக்கமாக படிப்பதை ஒரு இலக்காக கொண்டால் வாழ்வில் முன்னேற முடியும். நம்முடைய இலக்கு என்னவாக இருக்க முடியும்? ஒவ்வொரு மாணாக்கனும் படிப்பை முடித்து விட்டு ஒரு சிறப்பான பணியில் சேர வேண்டும் என்பது தானே அனைவரது நோக்கமாக இருக்கும். இன்று நமது மாணவ செல்வங்களுக்கு பற்பலவிதமான வாய்ப்புகள் நமது நாட்டிலே காத்துக் கொண்டிருக்கின்றன. பொதுத்துறை, தனியார் துறை, அரசுத்துறை, அரசு மற்றும் தனியார் இணைந்த துறைகள், வெளிநாட்டில் வேலை வாய்ப்பு, சொந்தமாக விவசாயம் மற்றும் வணிகம் போன்ற பற்பல துறைகளில் பணிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. இன்று நமது இந்திய திருநாடு ஒரு பேரரசாக, வல்லரசாக உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பொன்னான வாய்ப்பை நீங்கள் தவறவிடக் கூடாதல்லவா? கடந்த 30 வருடங்களில், வேலை வாய்ப்பு சில 100 மடங்காக அதிகரித்துள்ளது என்பது நிபுணர்களின் கருத்தாய்வு. வேலை தேடி செல்வது என்ற நிலை மாறி தகுதி உள்ளவரை வேலை தேடி வரும் என்ற காலம் உருவாகி வருகிறது.

மேற்கூறியது போல் பலவிதமான துறைகளில் பற்பல பணியிடங்கள் உருவாகி இருந்தாலும் மக்கள் தொகையும் வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே போவது கண் கூடான உண்மை. அனைத்து பணிகளுக்கும் கடுமையான போட்டி நிலவுகின்றது என்பதும் நிதர்சனமான உண்மையே. இப்படி இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான வழிகாட்டியே இக்குறிப்பேடாகும்.

பல பணிகளில் ஒரு சிறந்த பணி அரசுப் பணி என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை. பணி பாதுகாப்பு, மரியாதை, பொதுமக்களுக்கு நேரடியாக சேவை செய்யும் ஒரு சந்தர்ப்பம், பணியிலே முன்னேற்றம் காண வாய்ப்பு, சமூகத்திலே ஒரு சிறந்த இடம், பொறுப்பான வேலை போன்ற பல நற்பண்புகளை தன்னிடத்தே கொண்டது அரசுப்பணி.

அரசுப் பணியில் சேர்வது என்ற ஒரு நல்ல முடிவுக்கு வந்தபின், செய்ய வேண்டிய காரியங்கள் என்ன? முதலில் நமது எண்ணமும், நோக்கமும் உயர்வானதாகவே இருக்க வேண்டும். எனவே 10ஆம் வகுப்பிலே தேர்ச்சி பெறாவிட்டாலும் கூட, வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து கொண்டு, ஒரு அலுவலக உதவியாளர் வேலைக்கு செல்லலாம் என்ற நிலையை தவிர்த்து, அரசுப் பணியிலே ஒரு சிறந்த இடத்தை அடைய வேண்டும் என்ற இலக்குடன் பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதே ஒரு சிறந்த நோக்கமாகும். அரசுப் பணியில் சேர்வதற்கு என்ன தகுதி வேண்டும்? ஒரு இந்தியனாகவும், ஒரு பட்டப்படிப்பு உடையவராகவும், வயதுவரம்புக்குட்பட்டவராகவும் இருந்தால் மட்டுமே உயர் அரசுப் பணியில் சேர தகுதி உண்டு. எனவே 10 ஆம் வகுப்பையும், 12 ஆம் வகுப்பையும் வெற்றிகரமாக முடித்த பிறகு அடுத்த இலக்கு நிச்சயமாக ஒரு இளங்கலைப் பட்டப் படிப்பாகவே இருக்க வேண்டும். தமிழ் இலக்கணம் படிக்கலாம், விஞ்ஞானத்தையும் படிக்கலாம், கணிதத்தையும் படிக்கலாம், பூகோளத்தையும் படிக்கலாம்.

அது முக்கியமல்ல. தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள படிப்பிலே சிறப்பான கவனத்தை கொண்டு இவற்றை படித்து முடிக்க வேண்டும். முடித்த பின்னர் அகில இந்திய தேர்வாணையம் மூலமாகவோ (UPSC) அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவோ (TNPSC) பணியாளர் தேர்வாணையம் (Staff Selection Commission) மூலமாகவோ அரசுப் பணிக்கான தேர்வு எழுத

தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு தேவை என்ன? வெறும் பட்டப்படிப்பு மட்டுமல்லாது, பொது அறிவு, நாட்டு நடப்பு, அறிவியல், விளையாட்டு, அரசியல், அரசாங்கம், பொருளாதாரம் போன்ற பல்துறை சார்ந்த பொது அறிவினை வளர்த்துக் கொள்ளவேண்டும். தேர்வுகளிலே வெற்றிபெற என்ன தேவை? முன்பே கூறப்பட்டுள்ளது போல ஒரு இலக்கு, அதற்கான கடின உழைப்பு, தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சியே. " இளமையில் கல் " என்ற இலக்குடன் படித்தால் நிச்சயமாக வெற்றி உண்டு. மத்திய அரசாலோ, மாநில அரசாலோ அல்லது பொதுத் துறைகளாலோ நடத்தப்படும் பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தேவையானவை பட்டப்படிப்பிலே கற்றுக் கொண்ட பாடங்கள், பொது அறிவு, சாமார்த்தியமான, சமயோசிதமான புத்திகூர்மை மற்றும் மனோதிடம் ஆகும். எனவே, போட்டிகளிலே கலந்து கொள்ளும்போது எந்தவிதமான படபடப்புமின்றி, பொறுமையுடன் அனைத்து கேள்விகளுக்கும் பதில் எழுதுவது அவசியம். ஒரு தனி மனிதனாக, பொது மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்றாலும் கூட அரசுப் பணி மூலமாகச் செய்வது மிக இலகு. அரசுப்பணியில் சேர்பவர்கள்

அனைவருமே, எந்த ஒரு துறையில் இருந்தாலும், நேரடியாக பொது மக்களுக்கு, அதுவும் குறிப்பாக, பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நேரடியாக சேவை செய்யும் வாய்ப்பு உள்ளது. ஒரு பாதுகாப்பான பணி, உயர்வான, தகுந்த ஊதியம், வரையறுக்கப்பட்ட பணி, மற்றும் தகுந்த ஓய்வூதியம் இவை அனைத்தும் கிடைக்கக்கூடிய ஒரே பணி அரசுப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.

இதற்காக உங்களை தயார் செய்துகொள்ள இரண்டே இரண்டு செயல்கள்தான் தேவை. ஒன்று கடின உழைப்பு, மற்றொன்று விடா முயற்சி. அரசுப் பணிகளில் சேர்வதற்கு அறிவில் மிக சிறந்தவர்களாகவோ, பள்ளிக்கூடங்களில் / கல்லூரிகளில் முதல் மாணவராகவோ இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. இன்று அரசுப் பணியிலே இருக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் கல்லூரியிலே, பள்ளியிலே முதல் இடம் பெற்றவர்கள் அல்ல. நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, விடா முயற்சி மற்றும் கடின உழைப்பு போன்ற நற்பண்புகளே அரசுப்பணியில் சேர முக்கிய அணிகலன்களாகும். எந்த அரசுப் பணியில் சேர்வது? தமிழ்நாடு தேர்வாணைய குழுமத்தின் மூலமாக 7 பிரிவுகளில் தமிழக அரசுக்கு பணி செய்ய தகுந்த நபர்கள் தேர்வின் மூலமாகவும் அதன் பின்னர் ( முதல் மூன்று பிரிவுகளுக்கு மட்டும்) நேர்முக தேர்வு மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

இதுபோக, வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் சில பணிகளுக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக கிடைக்கும் பணிகளுக்கு 10வது அல்லது 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றிருந்தாலும் போதுமானது. அப்பணியிடங்களைப் பொதுவாக அலுவலக எழுத்தர் பணிக்கு பணி அமர்த்தம் செய்கின்றார்கள். நம் இலக்கு பொதுவாகவே பெரியதாகவே இருக்க வேண்டும். எனவே அரசுப் பணியில் சேர தமிழ்நாடு தேர்வாணை மையத்தின் மூலமாக வரையறுக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்குத் தேர்வு எழுதிடலாம். பகுதி 1 இல் (TNPSC Group-I) அடங்கியுள்ள பணியில் சேர இளங்கலை படிப்பு முடித்தவர் ஆக இருக்க வேண்டும். ஆனால், தேர்வுகளில் கேட்கப்படும் கேள்வி முதுகலை பட்டப்படிப்பிற்குச் சமமாக இருக்கும் என்பதனால் முதுகலை பட்டப்படிப்பு படித்த பின்னர் இத்தேர்வினை எதிர்கொள்வதே நலமாக இருக்கும். இத்தேர்வின் மூலமாக நமது தமிழக அரசில் மிக உயர்ந்த பதவிகளான துணை மாவட்ட ஆட்சித் தலைவர், துணை காவல்துறை கண்காணிப்பாளர், வணிகவரி துறை அலுவலர், தொழிலாளர் நல அலுவலர், ஊரக வளர்ச்சி போன்ற பகுதி 1ல் அடங்கியுள்ள பணிகளுக்கு நேரடியாக சேரலாம். ஒரு வேளை பட்டப்படிப்பிலே மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற்கல்வியில் சிறப்பான தகுதி கிடைந்திருந்தால் இதற்காகவே வரையறுக்கப்பட்டுள்ள தொகுதி 2 மற்றும் தொகுதி 4 (**Group II / Group IV**) என்ற தேர்வுகளில் கலந்துகொள்ளலாம். பகுதி 1,2,3 போன்ற தேர்வுகளுக்கு நேர்காணல் உண்டு.

இவற்றை எதிர்கொள்ள வேண்டுமெனில் பொது அறிவு, விடா முயற்சி, தன்னம்பிக்கை இவற்றைப் பொறுத்ததே. இது போக அரசு பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்ற வேண்டுமெனில், இளங்கலை ஆசிரியர் பட்ட பயிற்சி அல்லது முதுநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தப்பின், ஆசிரியர் தேர்வு வாரியம் (Teachers Recruitment Board) நடத்தும் தேர்வு மூலமாக தேர்வு பெற வேண்டும். ஒரு வேளை தனியார் தொழிற்கல்லூரியில் படிப்பினை முடித்து ஒரு டிப்ளமோ தகுதி பெற்றிருந்தாலும் கூட அரசுப் பணியில் சேர இயலும். ITI மூலமாக தேர்ச்சி பெற்றிருந்தால் அரசு நடத்தும் தேர்வினை எழுதி பல்வேறு அரசு தொழில் நிலையங்களில் பணியாற்ற வாய்ப்பு கிடைக்கும். தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியோ, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியோ தங்களது படிப்பிற்கு எந்த ஒரு செலவும் இல்லாமலேயே முடிக்கக்கூடிய ஒரு அரிய

வாய்ப்பை நமது அரசு அளித்திருக்கிறது. எனவே " மக்கள் பணியே மகேசன் பணி '' என்பதை உணர்ந்தால் அரசு பணியை தேர்ந்தெடுத்து அதற்குரிய முயற்சிகளில் இப்போதே இறங்க வேண்டும். காலமும் வாய்ப்புகளும் நம் எதிரே. அதை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 11. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், (T.N.P.S.C) ஓமந்தூரர் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

மாநிலத்தில் உள்ள மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பல்வேறு பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொருட்டு பள்ளி மேற்படிப்பு, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவை அவரவர் கல்வித்தகுதிக்கேற்ப போட்டித் தேர்வுகள் நடத்துவது இதன் பணியாகும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் பல்வேறு பதவிகளில் தோன்றும் காலியிடங்களை அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் அவ்வப்போது அறிவித்து வருகிறது. அதன் விவரம் வருமாறு.

### Name of the Examination/ Services

### I.GROUP – I SERVICES EXAMINATION (தொகுதி 1 தேர்வு)

துணை ஆட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், (வகை 1)வணிகவரி அலுவலர், கோட்ட வளர்ச்சி அலுவலர், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், மாவட்ட பதிவாளர்,ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், கோட்ட வளர்ச்சி அலுவலர், கோட்ட தீயணைப்பு அலுவலர் போன்ற பதவிகள். இதில் துணை ஆட்சியர், வணிகவரி அலுவலர், கோட்ட வளர்ச்சி அலுவலர், துணை பதிவாளர் போன்ற பதவிகளில் பதவி உயர்வு பெற்று பிற்காலத்தில் இ.ஆ.ப. அலுவலர்களாக வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதே போன்று காவல் கண்காணிப்பாளர் பதவியில் சேருவோர் இ.கா.ப. (IPS) பணிக்கு உயர்வு பெற வாய்ப்புகள் உள்ளன.

### II.GROUP I-A SERVICE EXAMINATION

### Tamil Nadu Forest Service

உதவி வன பாதுகாவலர் பதவி

### III.GROUP 1-B SERVICE EXAMINATION

Assistant Commissioner, Hindu Religious & Charitable Endowments Administrative Service.

உதவி ஆணையர், இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை

### IV. COMBINED SUBORDINATE SERVICES EXAMINATION – I

ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தொகுதி 1

நன்னடத்தை அலுவலர், மகளிர் நல அலுவலர், உதவி வணிகவரி அலுவலர், கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர். தொழிலாளர் உதவி ஆய்வாளர் போன்ற பல பதவிகளுக்கு விண்ணப்பித்து தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெற்று பணியில் சேரலாம். சார்பதிவாளர் நிலை-II, உதவி பிரிவு அலுவலர் (சட்டம் மற்றும் நிதித்துறை அல்லாது) உதவி பிரிவு அலுவலர் (சட்டத்துறை), உதவி பிரிவு அலுவலர் (நிதித்துறை), உதவியாளர் (சட்டத்துறை), உதவியாளர் (நிதித்துறை). தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அடங்கிய வருவாய் துறை உதவியாளர், போன்ற பதவிகளுக்கு பல்வேறு துறையில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

### V.COMBINED SUBORDINATE SERVICE EXAMINATION II

**ஒருங்கிணைந்த சார்நிலை பணி தொகுதி 2**

இளநிலை கூட்டுறவுச்சங்க ஆய்வாளர் (Junior Inspector of Co-operative Society)
நிலைய தீயணைப்பு அலுவலர் (Station Fire Officer)

## VI.GROUP IV SERVICES EXAMINATION

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் அடங்கிய தட்டச்சர், இளநிலை உதவியாளர் போன்ற பல பதவிகள் மற்றும் தொகுதி-4 தேர்வு, நீதிமன்றம் சார்ந்த பணிகளுக்கு இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து-தட்டச்சர் தமிழ்நாடு நிதி அமைச்சுப் பணியில் அடங்கிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

## VII. GROUP-V A SERVICE EXAMINATION

தொகுதி **V A** தேர்வு

தலைமை செயலக உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். (Assistant in Tamil Nadu Secretariat)

## VIII.GROUP VI SERVICE EXAMINATION

தொகுதி **VI** தேர்வு

வனத் தொழில் பழகுநர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.(Forest Apprentice)

## IX GROUP VII SERVICE EXAMINATION

தொகுதி **VI I** தேர்வு

இந்து அறநிலையத்துறையில் ஏற்படும் செயல் அலுவலர் நிலை-1 மற்றும் செயல் அலுவலர் நிலை-3 போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
(Executive Officer Grade I and Grade III)

## X GROUP VIII SERVICE EXAMINATION

தொகுதி **VIII**

இந்து அறநிலையத்துறையில் ஏற்படும் செயல் அலுவலர் நிலை-4 போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். (Executive Officer, Grade IV)

## XI COMBINED ENGINEERING SERVICES EXAMINATION

ஒருங்கிணைந்த பொறியியல் பணித் தேர்வு

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறையில் ஏற்படும் உதவிப்பொறியாளர், உதவி தொழிற்சாலை ஆய்வாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். (A.E. in PWD, Highways Department, Asst. Inspector of Factories)

## XII COMBINED ENGINEERING SUBORDINATE SERVICES EXAMINATION (DIPLOMA STANDARD)

ஒருங்கிணைந்த பொறியியல் சார்நிலை பணி தொகுதித் தேர்வு

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையில் ஏற்படும் இளநிலை பொறியாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். (Junior Engineers in P.W.D. and Highways Departments)

## XIII TAMIL NADU ADI-DRAVIDAR & TRIBAL WELFARE SUBORDINATE SERVICE

<u>தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் சார்நிலை பணி</u>

அரசு நந்தனார் மேல்நிலைப்பள்ளி, (ஆண்கள்) சிதம்பரம்-ல் ஏற்படும் உடற்பயிற்சி இயக்குநர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் (Physical Education Directior in Govt.Nandanar Hr,Sec, School for Boys at Chidambaram)

## XIV TAMIL NADU AGRICULTURAL ENGINEERING

**SUBORDINATE SERVICE**

**தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் சார்நிலைப்பணி**

இளநிலை பொறியாளர் மற்றும் உதவி புவியியல் நிபுணர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.(Junior Engineer and Asst. Geologist)

## XV TAMIL NADU AGRICULTURAL EXTENSION SERVICE

**தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க பணி**

வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) போன்ற பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.(Agricultural Officer (Extension))

## XVI.TAMIL NADU AGRICULTURAL MARKETING SUBORDINATE SERVICE

**தமிழ்நாடு வேளாண்மை விற்பனை சார்நிலைப்பணி**

பொறியியல் மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.(Engineering Supervisor)

## XVII TAMIL NADU AGRICULTURAL SERVICE

**தமிழ்நாடு வேளாண்மைப்பணி**

மாவட்ட வேளாண்மை துறை அலுவலர் , துணை வேளாண்மை அலுவலர் போன்ற பதவிகள்.(District Agricultural Officer, Deputy Agricultural Officer, Divisional Agricultural Officer etc.,)

## XVIII TAMIL NADU AGRICULTURAL SUBORDINATE SERVICE

**தமிழ்நாடு வேளாண்மை சார்நிலைப்பணி.**

புள்ளியியல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம். (Statistical Assistant)

## XIX TAMIL NADU ANIMAL HUSBANDRY SERVICE

**தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பணி**

Bio-Chemist, Asst.Director of Animal Husbandry போன்ற பதவிகள்

## XX TAMIL NADU ANIMAL HUSBANDRY SUBORDINATE SERVICE

**தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சார்நிலைப்பணி**

புள்ளியில் ஆய்வாளர் (Statistical Inspector) மற்றும் Librarian in the Institute of Veterinary Preventive Medicine, Ranipet போன்ற பதவிகள்.

## XXI TAMIL NADU ARCHITECTURAL SERVICE

தமிழ்நாடு கட்டிடப்பணி

உதவி கட்டிட கலைஞர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.(Assistant Architect in the office of the Chief Architect)

## XXII TAMILNADU BOILER SERVICE

தமிழ்நாடு கொதிகலன் பணி

கொதிகலன் ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (Inspector of Boiler)

## XXIII TAMIL NADU CO-OPERATIVE SUBORDINATE SERVICE

**தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணி**

உதவி புவியியல் நிபுணர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.(Asst. Geologist)

## XXIVTAMIL NADU EDUCATIONAL SERVICE

தமிழ்நாடு கல்விப்பணி

Head of Department in Electrical Engineering in Govt. Polytechnic, Head of Section in Civil Engineering, Govt. Polytechnic for women, Special Officer, Regional Schools of Printing போன்ற பதவிகள்.

## XXV TAMIL NADU EDUCATIONAL SUBORDINATE SERVICE

தமிழ்நாடு கல்வி சார்நிலைப்பணி

Foreman Instructor (Electronics), Govt. Colleges of Engineering and Technology, Baker in Govt. Polytechnic for Women போன்ற பல பதவிகள்.

## XXVI TAMIL NADU ELECTRICAL INSPECTORATE SEVICE

தமிழ்நாடு மின் ஆய்வுப்பணி

முதன்மை மின் ஆய்வாளர், உதவி மின் ஆய்வாளர் போன்ற பதவிகள்.(Chief Electrical Inspector, Asst. Electrical Inspector)

## XXVII TAMIL NADU EMPLOYMENT AND TRAINING SERVICE

தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சிப் பணி

தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்/உதவி இயக்குநர் பயிற்சி (Principal of Industrial Training Institute/Asst. Director of Training.)

## XXVIII TAMIL NADU EMPLOYMENT AND TRAINING SUBORDINATE SERVICE

தமிழ்நாடுவேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி

பயிற்சி அலுவலர், Hostel Superintendent cum Physical Training Officer போன்ற பதவிகள்.

## XXIX TAMIL NADU ENGINEERING SUBORDINATE SERVICE

தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப்பணி

பொது முதலாள் (General Foreman ), பணிகூட கிளை (Workshop Branch) , முதலாள் பொது பணிக்கூடம் (Foreman Public Workshop, Chennai ) போன்ற பல்வேறு பதவிகள்.

## XXX TAMIL NADU FISHERIES SERVICE

தமிழ்நாடு மீன்வளப்பணி

தானியங்கி பொறியாளர்,(Automobile Engineer) உதவி இயக்குநர் (Asst. Director of Fisheries) போன்ற பதவிகள், Fisheries Refrigeration Engineer, Fishery Economist போன்ற பதவிகள்.

## XXXI TAMIL NADU FISHERIES SUBORDINATE SERVICE

தமிழ்நாடு மீன்வள சார்நிலைப்பணி

ஆராய்ச்சி உதவியாளர், ஆய்வாளர், உதவி ஆய்வாளர், மேற்பார்வையாளர் போன்ற பதவிகள் (Research Assistant, Inspector of Fisheries, Sub Inspector of Fisheries etc.,)

## XXXII TAMIL NADU FORENSIC SCIENCE SERVICE

உதவி இயக்குநர் (இயற்பியல்) பதவி (Asst. Director, Physics)

## XXXIII TAMIL NADU FORENSIC SCIENCE SUBORDINATE

**SERVICE**

அறிவியல் உதவியாளர் நிலை-2, (Scientific Assit Grade II. (Store keeper) பண்டக பொறுப்பாளர் போன்ற பதவிகள்

**XXXIV TAMIL NADU FOREST SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு வன சார்நிலைப்பணி

Chemist, Intensive (Throat of Turkey) Research Lab, Ooty.

**XXXV TAMIL NADU GENERAL SERVICE**

தமிழ்நாடு பொதுப்பணி

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்,(District Employment Officer) உதவி பொது வழக்குரைஞர் நிலை-2 (Asst. Public Procesecutor Grade II) போன்ற பதவிகள்

**XXXVI TAMIL NADU GENERAL SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி

உதவி புள்ளியியல் ஆராய்வாளர், (Asst. Statistical Investigator) புள்ளியியல் ஆய்வாளர் (Statistical Inspector) போன்ற பதவிகள்

**XXXVII TAMIL NADU GEOLOGY AND MINING SERVICE**

தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கப்பணி

உதவி புவியியல் இயக்குநர் (Asst. Director of Geology & Mining)

**XXXVIII TAMIL NADU GEOLOGY AND MINING SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்க சார்நிலைப்பணி

உதவி புவியியல் நிபுணர், ( Assistant Geologist) Chemist Drilling Assistant போன்ற பதவிகள்

**XXXIX TAMIL NADU HANDLOOMS AND TEXTILES SERVICE**

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் பணி

உதவி இயக்குநர் பதவி (Assistant Director of Handlooms and Textiles)

**XL TAMIL NADU HANDLOOMS AND TEXTILES SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் சார்நிலைப்பணி

கைத்தறி ஆய்வாளர்,(Handlooms Inspector) தொழில்நுட்ப உதவியாளர்,(Senior Technical Assistant) இளநிலை பொறியாளர் (Junior Engineer, Civil) போன்ற பதவிகள்

**XLI TAMIL NADU HIGHER SECONDARY SERVICE**

தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி

மேல்நிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி கல்வி இயக்குநர்(Physical Directors/Directresses in Govt. Hr.Sec. Schools)

**XLII TAMIL NADU HIGHWAYS ENGINEERING SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் சார்நிலைப்பணி

அறிவியல் உதவியாளர் மற்றும் புவியியல் நிபுணர் (Scientific Assistant & Geolosit)

**XLIII TAMIL NADU INDUSTRIES SERVICE**

தமிழ்நாடு தொழில்துறை பணி

உதவி இயக்குநர், (Asst. Director) நேர்முக உதவியாளர் (Personal Assistant), இயக்குநர்(Director), உதவி கண்காணிப்பாளர் (Asst. Superintendent)போன்ற பதவிகள்.

## XLIV TAMIL NADU INDUSTRIES SUBORDINATE SERVICE

தமிழ்நாடு தொழில்துறை சார்நிலைப்பணி

உதவி பொறியாளர்(Asst. Engineer), இளநிலை பொறியாளர் (Junior Engineer), விரிவுரையாளர் (Lecturer), உதவி விரிவுரையாளர் (Asst. Lecturer )போன்ற பதவிகள்

## XLV TAMIL NADU JAIL SERVICE

தமிழ்நாடு சிறைப்பணி

கண்காணிப்பாளர்(Superintendent of Jails), ஜெயிலர் (Jailor) மற்றும் சைக்காலஜிஸ்ட் (Psychologist)போன்ற பதவிகள்

## XLVI TAMIL NADU JAIL SUBORDINATE SERVICE

தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப்பணி

Phenyl Assistant, காப்பாளர் (Matron) மற்றும் Social Case Expert

## XLVII TAMIL NADU LABOUR SERVICE

தமிழ்நாடு தொழிலாளர் பணி

தொழில் அலுவலர் பதவி ( Labour Officer) இப்பதவியில் சேருவோர் பதவி உயர்வு பெற்று பின்னாளில் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக பதவி உயர்வு பெற வாய்ப்பு உள்ளது.

## XLVIII TAMIL NADU MEDICAL SERVICE

தமிழ்நாடு மருத்துவப்பணி

உதவி_அறுவை மருத்துவர் (பொது) (Asst. Surgeon)போன்ற பதவிகள்

## XLIX TAMIL NADU MEDICAL SUBORDINATE SERVICE

தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப்பணி

நூலகர்,(Librarian) புள்ளியியலர் (Statistician), இளநிலை பொறியாளர் (Junior Engineer) போன்ற பதவிகள்

## L TAMIL NADU MINISTERIAL SERVICE

தமிழ்நாடு அமைச்சுப் பணி

Asst. Editor in the Gazetteer section of the Archieves, சட்டக்கல்லூரியில் நூலகர் மற்றும் உதவி நூலகர் பதவி, கிராம நிர்வாக அலுவலர்

## LI TAMIL NADU MOTOR VEHICLES MAINTENANCE SUBORDINATE SERVICE

தமிழ்நாடு இயக்கூர்தி பராமரிப்பு சார்நிலைப்பணி

General Foreman( பொது முதலாள்), Technical Assistant & Stock Verifier பதவிகள்

## LII TAMIL NADU PUBLIC HEALTH SERVICE

தமிழ்நாடு பொது சுகாதரப்பணி

Health Officer, Public Health Nurse, Micro Biologist போன்ற பதவிகள்

## LIII TAMIL NADU PUBLIC HEALTH SUBORDINATE SERVICE

தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப்பணி

புள்ளியியல் உதவியாளர்,Entomological Assistant, Librarian போன்ற பதவிகள்

## LIV POSTS IN THE TAMIL PUBLIC SERVICE COMMISSION

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்

Research Officer, Librarian, Senior Research Assitant போன்ற பதவிகள்

**LV TAMIL NADU SCHOOL EDUCATIONAL SERVICE**

தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி

மாவட்ட கல்வி அலுவலர் பதவி - இப்பதவிக்கு அடிப்படை கல்வித்தகுதி குறைந்த பட்சம் பி.எட் ஆகும். இப்பதவியில் சேர்வோர் துணை ஆட்சியர் (Deputy Collector) போன்று சில ஆண்டுகள் பணி முடித்தபின்னர் எஸ்.ஏ.எஸ் அலுவலராக பதவி உயர்வு பெறும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது.

**LVI TAMIL NADU SCHOOL EDUCATIONAL SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி

Lecturer in Education of the Blind, supervisor, Regional Training Centre for Teachers in Govt. schools for the blind, Ponnamallee.

**LVII TAMIL NADU SECRETARIAT SERVICE**

தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணி

Librarian in Secretariat Library, Assistant Librarian, Asst. Reception Officer in Tamil Nadu House, New Delhi போன்ற பதவிகள்

**LVIII TAMIL NADU SOCIAL DEFENCE SERVICE**

தமிழ்நாடு சமூக பாதுகாப்பு பணி

Superintendents of Boys Approved school and Asst. Director

**LIX TAMIL NADU SOCIAL DEFENCE SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு சமூக பாதுகாப்பு சார்நிலைப்பணி

தலைமையாசிரியர், School Assistant (English, Maths, Science, Social Studies) Tamil Pandits போன்ற பதவிகள்.

**LX TAMIL NADU STATE JUDICIAL SERVICE**

தமிழ்நாடு நீதிப்பணி

Civil Judge (Junior Division/Judicial Magistrate-First Class)-Ïஇப்பதவியில் இளமையில் சேருவோர் பிற்காலத்தில் மாவட்ட நீதிபதிகளாகவும் (District Judges). உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும் (Judges of the High Court) வருவதற்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

**LXI TAMIL NADU STATE LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT SERVICE**

தமிழ்நாடு நீதிபணி

English Reporter and Librarian

**LXII TAMIL NADU STATE TREASURY AND ACCOUNTS SERVICE**

தமிழ்நாடு கருவூல கணக்குப்பணி

Deputy Director of Sugar (Accounts) in the Directorate of Sugar and Class III Posts (Accounts Officer)

**LXIII TAMIL NADU STATIONERY AND PRINTING SERVICE**

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சகப்பணி

அரசு அச்சகத்தில் உதவி பணி மேலாளர் மற்றும் தனி அலுவலர் (Asst. Works Manager and Special Officer in the Govt. Press )

**LXIV TAMIL NADU STATISTICS SERVICE**

தமிழ்நாடு புள்ளியியல் பணி

புள்ளியியல் அலுவலர் மற்றும் உதவி புள்ளியியல் இயக்குநர்

**LXV TAMIL NADU TECHNICAL EDUCATION SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி சார்நிலைப்பணி

Physical Director, Boiler Foreman போன்ற பதவிகள்

**LXVI TAMIL NADU TOWN AND COUNTRY PLANNING SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சார்நிலைப்பணி

Research Assistant (Statistcis, Architectural Asst/Planning Asst, Supervisor போன்ற பதவிகள்

**LXVII TAMIL NADU TRANSPORT SERVICE**

தமிழ்நாடு போக்குவரத்துப்பணி

Asst. Engineer, Depot Superintendents போன்ற பதவிகள்

**LXVIII TAMIL NADU TRANSPORT SUBORDINATE SERVICE**

தமிழ்நாடு போக்குவரத்து சார்நிலைப்பணி

இயக்ஊர்திகள் ஆய்வாளர் நிலை-2

**LXIX TAMIL NADU JUDICIAL MINISTRIAL SERVICE**

தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி

Director of Physical Education in the Govt. Law Colleges

**LXX TAMIL NADU LEGAL EDL. SERVICE**

தமிழ்நாடு சட்டக்கல்விப்பணி

12.அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை-40

## (ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE, CHENNAI-40)

இளங்கலை/முதுகலை பட்டப்படிப்பை முடித்த பின்னர், அகில இந்திய அளவிலே ஒரு உயர் அதிகாரியாக வரவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை மாணாக்கர்கள் வெற்றிகரமாக அடைய வேண்டும் என்பதற்காகவே நமது தமிழக அரசு **'' அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம்''** **(ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE, CHENNAI-40)** என்ற ஒரு சிறப்பான பயிற்சி மையத்தை சென்னை அண்ணா நகரில் அமைத்துள்ளது. இப்பயிற்சி மையத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்காக குடிமைப் பணி தேர்வுகளுக்காக **I.A.S., I.P.S., I.F.S.,** மற்றும் இதர மத்திய அரசு பணிகளுக்காக **(Indian P & T Accounts and Finance Service, Indian Audit and Accounts Service, Indian Customs and Central Excise Services, Indian Defence Accounts Service etc.** , இலவச பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி மையம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிவ, மிபிவ மாணவர்களுக்கு மூன்று நிலைகளில் இலவச பயிற்சி அளிக்கிறது.

### 1. பூர்வாங்க தேர்வு ( **Preliminary Examination)**

பூர்வாங்கத் தேர்வு பயிற்சிக்கு சேர்வது தொடர்பான விளம்பரம் ஆகஸ்ட்/செப்டம்பர் மாதத்தில், ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்தி தாள்களில் வெளியிடப்படும். அதில் கண்டவாறு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தினை தொடர்ந்து அக்டோபர்/நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் 10 தேர்வு மையங்களில் (சென்னை, சிதம்பரம், கோயம்புத்தூர், தர்மபுரி, மதுரை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் ) நடைபெறும் நுழைவுத் தேர்வில் பெற்ற உயர் மதிப்பெண்கள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு மாணவ/மாணவியர்களுக்கு பூர்வாங்க தேர்வு எழுதுவதற்கு இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த பயிற்சியாளர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.59,920-க்கு மிகாமல் இருப்பின் உண்டி, உறையுள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த பயிற்சியாளர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ஆண்டுக்கு ரூ.50,000-க்கு மிகாமல் இருந்தால் உண்டி, உறையுள் கட்டணம் செலுத்த தேவையில்லை. இதற்காக வருவாய் துறையிடமிருந்து வருமானச் சான்றிதழ் பெற்று இப்பயிற்சி மையத்தில் ஒப்படைக்க வேண்டும். பயிற்சிக்கு தேவையான புத்தகங்கள் மற்றும் கணினி இலவசமாக அளிக்கப்படுகிறது.

### 2. முதன்மைத் தேர்வு (**Main Examination) :-**

பூர்வாங்கத் தேர்வில் வெற்றிபெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிவ, மிபிவ மாணவர்களுக்கு ஆகஸ்ட் முதல் முதன்மை தேர்வுக்கான இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. நேரடியாக பூர்வாங்க தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களும் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

### 3. நேர் காணல் (**Viva-voce)**

முதன்மைத் தேர்வில் வெற்றிபெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிவ, மிபிவ மாணவர்களுக்கு அவர்கள் நேர்காணலில் நல்ல மதிப்பெண்கள் பெற, இப்பயிற்சி மையத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு **Mock Interview** நடத்தப்படுகிறது. மேலும் இவர்கள் புதுடெல்லி தமிழ்நாடு விருந்தினர் இல்லத்தில் தங்க அரசிடமிருந்து அனுமதி பெற்று மாணவர்கள் புதுடெல்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

**மாணவர்களுக்கு கீழ்க்கண்ட விகிதங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது**

| | முழுநேர பயிற்சி | பகுதி நேர பயிற்சி |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 98 | 49 |
| பழங்குடியினர் | 2 | 1 |
| பிற்படுத்தப்பட்டோர் | 54 | 27 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் | 36 | 18 |
| இதர வகுப்பினர் | 10 | 5 |
| | 200 | 100 |

எனவே, இவ்வாறு அகில இந்திய அளவில் உயர் அதிகாரியாக வரவேண்டும் என்ற நோக்கோடு படித்துவரும் மாணவர்கள் இப்பயிற்சி மையத்தை தக்க அளவில் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழக அரசு அழைக்கின்றது.

பிரதானத் தேர்வு, வினாக்களுக்கு விடை எழுதுகின்ற படிவத்தில் (Descriptive type) நடத்தப்படுகின்ற தேர்வு ஆகும்.

இந்த 9 தாள்களில் 3 முதல் 9 வரையுள்ள தாள்களில் பெறுகின்ற மதிப்பெண்களை வைத்து வரிசைப்படுத்தி ஆளுமைத் தேர்வுக்கு (Interview/Personality Test) அழைக்கிறார்கள்.

மத்திய தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் இந்திய குடியுரிமைப் பணித் (Indian Administrative Service) தேர்வானது நாடு முழுவதிலும் உள்ள 43 தேர்வு மையங்களில் நடத்தப்படுகிறது. இதன் பின்னர் ஆளுமைத் தேர்வு (Interview / Personality Test) புது டெல்லியில் நடத்தப்படுகிறது. இது 300 மதிப்பெண்கள் கொண்டதாகும்

பிரதானத் தேர்வு மதிப்பெண்ணும் நேர்முகத் தேர்வு / ஆளுமைத் தேர்வு மதிப்பெண்ணும் கூட்டப்பெற்று இறங்கு வரிசையில் பட்டியலிடப்பட்டு காலி இடங்களுக்கு ஏற்றவாறு வெற்றி பெற்றவர்கள் விவரம் பட்டியலிடப்படுகிறது. இதில் ஒருவர் பெற்ற ரேங்க் ( தரவரிசை) பணியமர்த்த வேண்டிய காலியிடங்கள், பணியில் தேர்வு செய்யப்பட்டவரின் பணிவிருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அவருக்கு பணி ஒதுக்கப்படுகிறது. இதில் I.A.S மற்றும் I.P.S. பணிகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் கண்டிப்பாக இந்திய நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். முக்கியமாக இந்தத் தேர்வினை எழுத விரும்புபவர்கள் ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு ஆண்டின் தேர்வுக்கும் அந்த ஆண்டின் ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று 21 வயது நிரம்பியவராகவும் இதர வகுப்பைச் சேர்ந்தவகள் 30 வயதுக்குள்ளும், பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 33 வயதுக்குள்ளும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவர்கள் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

## <u>குடிமைப் பணித் தேர்வு</u>

**குடிமைத் தேர்வு மொத்தம் மூன்று நிலைகளைக் கொண்டது.**

- **அ.** **தொடக்கத் தேர்வு** **( Preliminary )**
- **ஆ.** **முதன்மைத் தேர்வு** **( Main )**
- **இ.** **ஆளுமைத் தேர்வு** **( Personality Test / Interview )**

**தொடக்கத் தேர்வு இரண்டு தாள்களைக் கொண்டது.**

1. முதல் தாள் - விருப்பப் பாடம் - ( Optionals) - 300 மதிப்பெண்கள்
2. இரண்டாம் ாள் - பொது அறிவு - (General Studies) - 150 மதிப்பெண்கள்

முதன்மைத் தேர்வு சரியான விடையை தெரிவு செய்தல் (Multiple Choice) அடிப்படையில் அமைந்த கொள்குறிவகை (Objective type) தேர்வு ஆகும். இத் தேர்வினை எழுத விரும்புவோர் மொத்தம் 23 விருப்பப் பாடத்திலிருந்து ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து எழுதலாம்.

**முதன்மைத் தேர்வு ஒன்பது தாள்களைக் கொண்டது.**

1 அரசியலமைப்புச் சட்டம் எட்டாவது அட்டவணையில் உள்ள ஏதேனும் ஒரு மொழியில் தேர்வு
**- 300 மதிப்பெண்கள்**

2. ஆங்கிலம் **- 300 மதிப்பெண்கள்**

3. பொதுக் கட்டுரைத் தாள் **- 200 மதிப்பெண்கள்**

4 **& 5** பொது அறிவு, முதல் இரண்டாம் தாள்கள்
(General Studies 1 & II Papers) 2 X 300 = **600** மதிப்பெண்கள்

6,7,8 மற்றும் 9
விருப்பப் பாடம் 1 மற்றும் 2 (ஒவ்வொன்றிலும்
இரண்டு தாள்கள் உடையது) 4 X 300 =**1200** மதிப்பெண்கள்

இதில் 1, 2 ஆகிய தாள்கள் தகுதி பெறுவதை தீர்மானிக்கின்ற தாள்கள் ஆகும்.

மேற்குறிப்பிட்ட விவரங்களைத் தெரிந்து கொண்ட மாணவச் செல்வங்களே, விடாமுயற்சி, கடின உழைப்பு என்ற கருவிகளைக் கொண்டு உங்களது உயரிய நோக்கமான, அகில இந்திய அளவில் உயர் அதிகாரியாக தேர்ச்சி பெற, வாழ்த்துகள்.

## 13. சமுதாயக் கல்லூரிகள்

சமுதாயக் கல்லூரிகள் மற்ற கல்லூரிகளிலிருந்து பல்வேறு வகைகளில் வேறுபடுகின்றன. பொதுவான ஒரு கல்வியை வழங்காமல் குறிப்பிட்ட ஒரு துறையில் தேர்ந்த மாணவர்களது அறிவையும், திறமையையும் நேரடியாகப் பயன்படுத்தி அதன் மூலம் அனுபவ அறிவை வழங்குகின்றன. சமுதாயக் கல்லூரிகள் நேரடியாக எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வழங்க உத்தரவாதம் தர இயலாவிட்டாலும், இங்கு பயிலும் மாணவர்களுக்கு வேலை கட்டாயம் கிடைக்கும் என்ற வழிவகைகளைக் காட்டுவதோடு பலர் சுயமாகத் தொழில் செய்யவும் வழிகாட்டுகின்றன என்கின்றார் தமிழ்நாடு சமுதாயக் கல்லூரிகள்ஆலோசகர் அருட்திரு. சேவியர்அல்போன்ஸ்.
பி.ஏ, பி.எஸ்.சி., பி.காம்., படித்தவர்களுக்கும் பிளஸ் டூ மற்றும் பத்தாண்டு உயர்நிலைக் கல்வி முடித்தவர்களுக்கும் ஓராண்டு டிப்ளமோ படிப்புகள் நடத்தப்படுகின்றன. பள்ளியிலிருந்து இடையிலேயே விலகிச் சென்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் அளவில் தொழிற்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் கல்விகற்கும் போதே போதுமான தொழில் அனுபவம் பெறுகிறார்கள். அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்ப பல்வேறு வகையான தொழிற்படிப்புகள் கற்றுத் தரப்படுகின்றன.

1. 10 மற்றும் 12 வகுப்பிற்கு பிறகு மாணவர்கள் பயிலக்கூடிய கல்விக் குறித்த விவரங்கள்

பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது படித்து முடித்த மாணவர்கள் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில்(DOTE Campus, Guindy, Chennai-25) பின்வரும் பட்டப்படிப்பில் சேர்ந்து வேலை வாய்ப்புப் பெறலாம்.

| வ எண். | பாடத்திட்டத்தின் பெயர் | தகுதி | காலம் | மொழி |
|---|---|---|---|---|
| 1. | பி.ஏ., பி.லிட்.,- தமிழ் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் |
| 2. | பி.ஏ.- ஆங்கிலம் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 3. | பி.ஏ.- வரலாறு | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 4. | பி.ஏ.- பொருளாதாரம் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 5. | பி.ஏ.- சுற்றுலாவியல் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 6. | பி.ஏ.-பொது நிர்வாகம் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 7. | பி.காம்.- வணிகவியல் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 8 | பி.எஸ்.சி.- கணிதம் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |
| 9 | பி.சி.ஏ.- கணினிவியல் | 10 அல்லது +2 | மூன்று ஆண்டுகள் | தமிழ் மற்றும் ஆங்கிலம் |

இப்பல்கலைக்கழகம் மட்டும் அல்லாது மாநிலத்தில் உள்ள பிற பல்கலைக்கழகங்களும் மேற்குறிப்பிட்ட முறையில் பாடத்திட்டத்தினை வழங்குகின்றன.

2. பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது படித்து முடித்த மாணவர்கள் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் பின்வரும் சுய வேலை வாய்ப்பு / உடனடி வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பட்டயப்படிப்பில் சேர்ந்து வேலை வாய்ப்புப் பெறலாம்.

| வ.எண். | பாடத்திட்டத்தின் பெயர் | தகுதி | காலம் | மொழி |
|---|---|---|---|---|
| 1. | நர்சரிபள்ளி ஆசிரியர் பயிற்சி | +2 தகுதி | 1 வருடம் | ஆங்கில வழி |
| 2. | சுகாதார உதவியாளர் | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | ஆங்கில வழி |
| 3. | டிடிபி ஆப்ரேட்டர் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | ஆங்கில மற்றும் தமிழ் வழி |
| 4. | ரெப்ரிஜிரேசன் மற்றும் ஏர்கண்டிசன் டெக்னீசியன் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | தமிழ் வழி |
| 5. | நான்கு சக்கர வாகன பழுது பார்த்தல் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | தமிழ் வழி |
| 6. | பிளம்பிங் டெக்னீசியன் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | தமிழ் வழி |
| 7. | கேட்டரிங் உதவியாளர் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | தமிழ் வழி |
| 8. | ஹவுஸ் எலக்ட்ரீசியன் பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | தமிழ் வழி |
| 9. | வடிவமைத்தல் மற்றும் தையற்கலை பயிற்சி | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | ஆங்கில வழி |
| 10. | கணினி பயன்பாடு | 10ஆம் வகுப்பு | 6 மாதம் | ஆங்கில மற்றும் தமிழ் வழி |
| 11. | ஆங்கிலம் போதித்தல் பயிற்சி | +2 தகுதி | 6 மாதம் | ஆங்கில வழி |
| 12. | ஆரம்ப பள்ளி கணிதம் போதித்தல் பயிற்சி | +2 தகுதி | 6 மாதம் | ஆங்கில வழி |
| 13. | சமையற்கலைப் பயிற்சி மேலாண்மையில் பட்டயம் | 10ஆம் வகுப்பு | | ஆங்கில வழி |
| 14 | டேலி சாப்ட்வேர் | 10ஆம் வகுப்பு | 1 வருடம் | ஆங்கில வழி |

மேற்கண்ட பாடத்திட்டங்கள் அனைத்தும் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தப் பட்டயப் படிப்பினை படிப்பதற்கு குறைந்த வருமானம் உள்ள மாணவர்களுக்கு தெற்காசிய கூட்டமைப்பு, மதன்சீத்சங் உதவித்தொகை வழங்கி ஊக்குவிக்கின்றது.

இப்பல்கலைக்கழகம் தெளிவான மற்றும் தளர்த்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கையின்போது மாற்றுச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களைக் கூட அளிக்க வேண்டியதில்லை.

தொழில் கல்விப் பாடத்திட்டங்களை இப்பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி மையங்கள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் அளிப்பதால் மாணவர்களுக்குத் தரமான பயிற்சி கிடைக்கின்றது. இப்பல்கலைக்கழகம் தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் தனது பாடத்திட்டங்களை வழங்க பாடத்திட்ட மையங்களை உருவாக்கியுள்ளது. மாணவர்கள் தாங்கள் வசிக்கின்ற இடத்திற்கு அருகிலேயே இந்தப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

சுயமாக படிக்கும் வகையில் இப்பல்கலைக்கழகம் தொலைநிலைக் கல்வியின் வல்லுநர்களைக் கொண்டு பாடப்புத்தகங்களைத் தயாரித்து தனது மாணவர்கள் அனைவருக்கும் வழங்குவது இப்பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்பாகும்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தனது தொழில் கல்விப் பாடத்திட்டத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ் மற்றும் வாழ்க்கை நிர்வகிக்கும் திறமைகள் என்ற இரண்டு பாடங்களைக் கட்டாயப் பாடமாக வைத்துள்ளது.

மாணவர்களின் நலனுக்காகக் குறைவானக் கட்டணம், தவணை முறையில் கட்டணம் செலுத்த அனுமதிப்பது போன்ற தனிச் சலுகைகள் இப்பல்கலைக் கழகத்தில் சேரும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 14.தொழில்துறைக் கல்வி

1. தொழில்நுட்பம், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவத் துறை போன்ற தொழில்துறைக் கல்விகளில் பலரும் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். இத்தகைய கல்வி நிலையங்களில் உள்ள சேர்க்கை இடங்கள் அதிகரித்து வருவதால் ஓரளவு நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர் இப்படிப்புகளில் எளிதாகச் சேரும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும் இவற்றில் குறிப்பாகத் தொழில் நுட்பக்கல்லூரிகளில் பலவிதத் தரவேறுபாடுகள் உள்ளன. சில தனியார் கல்வி நிறுவனங்கள் மிக அதிகமான கட்டணங்களை வசூலிக்கும். சிலவற்றில் கற்பிக்கும் முறைகளும் வசதிகளும் குறைவாக இருப்பதால் இறுதித் தேர்வில் வெற்றி காண்பது கடினமாக இருக்கும். இன்றைய நிலையில் இத்தகைய வேறுபாடுகளை எளிதாகக் கண்டறிய முடியாது. இதற்கு உள்ள ஒரே வழி 11 ஆம் வகுப்பு முதலே ஒரு சில கல்லூரிகளைப் பட்டியலிட்டு, அங்குப் படிக்கும் மாணவர்களுடன் தொடர்பு கொண்டுஅவற்றின் தரத்தை அறியலாம்.

2. தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைக்காவிட்டால் மனச்சோர்வு அடைய வேண்டியதில்லை. பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கிடைக்கும் பட்டங்கள் கூட தொழில் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும். வணிகவியல், உயிரியல், உணவுத்துறை, செய்தித்தொடர்புத்துறை, மருத்துவ நிலையச் சேவைத் துறை, விளம்பரத்துறை, சுற்றுலாத்துறை, வேதியியல் சேவைத்துறை போன்ற பல பட்டப்படிப்புகள் எங்குள்ளன என்று அறிய வேண்டும். இவற்றில் பல மற்ற மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்களிலும், மத்தியப் பல்கலைக் கழகங்களிலும் கூட இருக்கலாம். இவற்றில்சேரத் தேவையான முயற்சிகளை ஓராண்டுக்கு முன்பாகவே கேட்டறிய வேண்டும்.

3. பல மாணவர்கள் அடுத்தக்கட்டமாக தன்னிச்சையாகவோ சூழ்நிலையின் காரணத்தினாலோ அறிவியல், கலை, மொழித்துறை, சமுகவியல் போன்ற படிப்புகளைப் படிக்க வேண்டியதிருக்கும். இந்தக் கட்டத்திலும் மிகத் தரமுள்ள பிரசித்தமான கல்வி நிலையங்களில் வாய்ப்புகளைத் தேடவேண்டும். எந்தப் படிப்பாயினும் நல்ல ஆசிரியர்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் நிர்வாகிகளைக் கொண்ட கல்வி நிலையங்களில் படிப்பவர்களின் பிற்கால வாழ்க்கை நன்கு அமையும்.

4. ஒரு சிலர் பிளஸ் டூ படிப்புக்குப் பிறகும்கூட பாலிடெக்னிக் படிப்புக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருப்பர். அதற்கேற்ப உள்ள வாய்ப்புகள், பாடத்துறைகள் போன்ற செய்திகளை அறிந்திருப்பது நலம்.

15. மேல்நிலைக் கல்வியில் கற்பிக்கப்படும் தொழிற்பாடங்கள் விவரம்

1. Agricultural Chemicals
2. Crop Production
3. Dairying
4. Farm Mechanics and Post Harvest Technology
5. Poultry
6. Plant Protection
7. Sericulture and Apiculture
8. Small Farm Management
9. Spices and Plantation Crops
10. Vegetables and Fruits
11. Composing & Printing Technology
12. Banking and Confectionary
13. Child Care and Nutrition
14. Dress Designing and Making
15. Dietetics, Nutrition and food Preparation
16. Food Preservation
17. Textiles and Designs
18. Child Preservation
19. Banking Assistant
20. Co-operative Management
21. Marketing and Salesmanship
22. Office Secretary ship (With Shorthand)
23. Office Secretary ship (With Accountancy)
24. Accountancy & Auditing
25. Building Maintenance
26. Domestic Electronics & Protection Equipment
27. Radio & T.V. Maintenance & Reparis
28. Textile Technology
29. Auto Mechanic.
30. Technical Assistant (Sports & Games)
31. Medical Laboratory Assistant
32. Nursing Course
33. Business Machines & Computer
34. Fisheries
35. Draftsman (Mechanical)
36. Draftsman (Civil)
37. Ele.Domestic Appliances
38. General Machinist
39. Maintenance & Service Textile
40. Ele. Motor Rewinding
41. Refrigeration & Air conditioning Equipment
42. Fitting
43. Letter Press Printing
44. Photography
45. Composing & Printing Technology
46. Insurance

தமிழ்நாட்டில் 1762 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழிற்பாடப்பிரிவுகள் உள்ளன. அருகாமையில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் எந்தெந்தத் தொழிற்பாடப் பிரிவுகள் உள்ளன என மாணவர்கள் அறிந்து கொண்டு விரும்பிப் பாடப்பிரிவில் சேரலாம்.

தொழிலறிவு தன்னம்பிக்கையைத் தருவதோடு, அதே துறையில் மேற்படிப்புக்கு மிக உதவியாய் இருக்கும். சுய தொழில் ஈடுபாட்டிற்கும் இது துணை நிற்கும்.

## 16. இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் சேரத் தகுதிகள் விவரம்

மேல்நிலைக் கல்வியில் பெறப்படும் மதிப்பெண் அடிப்படையில் இரண்டாண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகிறது. மேற்காண் பயிற்சிக்கு விண்ணப்பிக்க மேல்நிலைக் கல்வியில் 45% (540/1200) மதிப்பெண்கள் பெற்றிருத்தல் அவசியம். எனினும், உயர் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. அதிகபட்ச வயது வரம்பாகத் தாழ்த்தப்பட்ட/மலைவாழ் பிரிவினர் தவிர்த்து அனைத்துப் பிரிவினருக்கும் 30 வயதாகவும், விதவைகளுக்கு 40 வயது எனவும் உள்ளது. அறிவியல் பாடப்பிரிவில் 50% மாணவ/மாணவிகளும், கலைப்பாடப் பிரிவில் 25% தொழிற்பாட பிரிவில் 25% மாணவ/மாணவிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். மேல்நிலைக் கல்வியில் பயின்ற பாடப்பிரிவு, இனசுழற்சி, பாலினம் (ஆண்/பெண்) மற்றும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் வீதம் 29 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், 9 அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், 43 அரசு உதவி பெறாத சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 188லும் ஒற்றைச் சாளரமுறையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகிறது. மேற்காண் பயிற்சியினை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6 நடத்துகிறது.

இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றோர் வேலை வாய்ப்பகப் பதிவு முன்னுரிமை மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் 8 ஆம் வகுப்பு வரைக் கற்பிக்கும் ஆசிரியர்களாக அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் நியமனம் செய்யப்படுவர்.

### தமிழக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

### மாவட்ட ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் (DIET)

1. திருவல்லிகேணி, சென்னை
2. திரூர், திருவள்ளூர் மாவட்டம்.
3. காஞ்சிபுரம் மாவட்டம்.
4. ராணிபேட்டை, வேலூர் மாவட்டம்.
5. கீழ்ப்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.
6. ஜி.அரியூர், விழுப்புரம் மாவட்டம்.
7. வடலூர், கடலூர் மாவட்டம்.
8. குருகத்தி, நாகப்பட்டினம் மாவட்டம்.
9. மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.
10. ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
11. புதுக்கோட்டை மாவட்டம்.
12. லால்குடி, திருச்சி மாவட்டம்.
13. பெரம்பலூர் மாவட்டம்.
14. மாயனூர், கரூர் மாவட்டம்.
15. நாமக்கல் மாவட்டம்.
16. உத்தமசோழபுரம், சேலம் மாவட்டம்.
17. கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.
18. பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.
19. திருமூர்த்தி நகர், கோவை மாவட்டம்.
20. கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.
21. ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
22. காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.
23. மஞ்சூர், ராமநாதபுரம் மாவட்டம்.
24. டி.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.
25. பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.
26. உத்தமபாளையம், தேனி மாவட்டம்.
27. முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி
28. வானரமுட்டி, தூத்துக்குடி மாவட்டம்.
29. தேரூர், கன்னியாகுமரி மாவட்டம்.

**அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் கீழ்க் கண்ட இடங்களில் உள்ளன.**

1. இராயப்பேட்டை (மகளிர்) சென்னை.
2. இராணிப்பேட்டை (மகளிர்) வேலூர்
3. சமூகரங்கபுரம், திருநெல்வேலி மாவட்டம்
4. ஜோகில்பட்டி, விருதுநகர் மாவட்டம்
5. கங்கவல்லி, சேலம் மாவட்டம்
6. சின்னதாராபுரம், கரூர் மாவட்டம்
7. தாயார்சாகிப்தெரு, சென்னை-2 (உருது)
8. தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம்
9. கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்

**அரசு அங்கீகாரம் பெற்ற அரசு உதவி பெறும் தனியார் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்**

1. அவ்வை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, சென்னை. ( பெண்களுக்கானது)
2. புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, வேப்பேரி, சென்னை. (பெண்களுக்கானது)
3. புனித அன்னம்மாள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, மாதவரம், சென்னை(பெண்கள்)
4. ஞானோதய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, புனித தாமஸ்மலை, சென்னை. பெண்களுக்கானது
5. மேரி இமாகுலேட் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, திருப்பத்தூர். பெண்களுக்கானது
6. கன்கார்டியா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, ஆம்பூர். ஆண்களுக்கானது.
7. யூனியன் மிஷன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, விருதம்பட்டு. ஆண்களுக்கானது.
8. பீட்டி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, ராணிப்பேட்டை. பெண்களுக்கானது
9. புனித மேரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, அன்மருதை, திருவண்ணாமலை. பெண்களுக்கானது
10. ஆர்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டிவனம். ஆண்களுக்கானது.
11. தூய இருதய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கடலூர். பெண்களுக்கானது
12. சேவா மந்திர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பரங்கிப்பேட்டை. பெண்களுக்கானது
13. டி.இ.எல்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, தரங்கம்பாடி. ஆண்களுக்கானது.
14. புனித தெரஸா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, தரங்கம்பாடி. பெண்களுக்கானது
15. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மன்னார்குடி. பெண்களுக்கானது
16. பெரியார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. ஆண்களுக்கானது.
17. நாகம்மை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. பெண்களுக்கானது
18. ஆர்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. ஆண்களுக்கானது.
19. புனித ஏஞ்சலா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பொன்மலைப்பட்டி, திருச்சி. பெண்களுக்கானது
20. டி.எம். அன்ட் ஆர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருமங்கலம், மதுரை. பெண்களுக்கானது
21. டி.இ.எல்.சி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உசிலம்பட்டி. (பெண்களுக்கானது)
22. புனித தெரசா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மதுரை. (பெண்களுக்கானது)
23. சாங்ட்டா பாத்திமா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டுக்கல். (பெண்களுக்கானது)
24. வியாகுல அன்னை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டுக்கல். (பெண்களுக்கானது)
25. புனித மைக்கேல் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பழனி. (பெண்களுக்கானது)
26. சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,வத்தலகுண்டு. (ஆண்களுக்கானது)
27. ராமகிருஷ்ணா மிஷன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,கோவை. (ஆண்களுக்கானது)
28. புனித மேரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கருமாதம்பட்டி, கோவை. (பெண்களுக்கானது)
29. பெத்லஉறம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உதகை. (பெண்களுக்கானது)
30. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பகல்பட்டி, சேலம். (பெண்களுக்கானது)
31. சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உறஸ்தம்பட்டி, சேலம். (பெண்களுக்கானது)
32. என்.ஆர்.தாஸ் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, வடமலாபுரம், விருதுநகர். (ஆண்களுக்கானது)
33. புனித ஸ்தனிஸ்லாஸ் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சாத்தூர். (ஆண்களுக்கானது)
34. கிறிஸ்து ராஜா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை. (ஆண்களுக்கானது)
35. பிஷப் சார்ஜென்ட் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை. (ஆண்களுக்கானது)
36. ஊழியஸ்தானம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பழையகோட்டை, திருநெல்வேலி. (பெண்களுக்கானது)
37. சாரா டக்கர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை. (பெண்களுக்கானது)
38. வள்ளியம்மையார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, குலசேகரப்பட்டினம், தூத்துக்குடி. (பெண்களுக்கானது)
39. புனித ஜான் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, நாசரேத், தூத்துக்குடி. பெண்களுக்கானது
40. புனித அன்னம்மாள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, அடைக்கலாபுரம், தூத்துக்குடி. (பெண்களுக்கானது)
41. டி.வி.டி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கோட்டார், கன்னியாகுமரி. (ஆண்களுக்கானது)

42. குழந்தை இயேசு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மூளகுமுடு, கன்னியாகுமரி. (பெண்களுக்கானது)
43. ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சர்ச் பார்க், சென்னை. (பெண்களுக்கானது) (ஆங்கில வழி கல்வி)

மேற்கண்ட எதுவுமே தங்களுக்கு அமையாவிட்டால் கூட, கவலைப்பட வேண்டாம். பல்வேறு திறந்தநிலைப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்புகள் தரம் வாய்ந்தவையாக உள்ளன. தொலைதூரக் கல்வியிலும் தரவேறுபாடுகள் உள்ளன. இதுபற்றிய விபரங்களையும் அறிந்திருப்பது நல்லது.

தற்போது கல்லூரிகளில் மேற்படிப்புப் படிக்கச் செல்லும் மாணவ, மாணவியர் பட்டம் பெற்றபின், அரசாங்க வேலை கிடைக்கும் என்ற மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் அரசாங்க வேலை வாய்ப்புகள் மிகக் குறைந்து விடும். தனியார் நிறுவனங்களில் சேர்ந்து செயல்படவோஅல்லது தாமாகவே தொழில் தொடங்கவோ கல்லூரிகளில் படிக்கும் போதே தயார் செய்து கொள்ளவோ வேண்டும். இதற்கேற்ப பாடங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். சில பாடங்களில் பாடத்திட்டத்துக்கும் மேலாக பல திறமைகளைப் பெற உள்ள வழிமுறைகளைக் கண்டறிந்து கூடுதல் திறமைகளைப் பெறவேண்டும்.

ஒரு சிலருக்கு வெளிநாட்டுக்குச் சென்று மேற்படிப்புப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் சிறுவயதிலிருந்து தோன்றிவிடுகிறது. அவர்கள் எந்தெந்தத் துறையில் படித்தால் வெளிநாட்டுப் படிப்பு வாய்ப்புகள்அதிகம் உள்ளன என்றும் அதற்கான தகுதிகள் என்னென்ன என்றும் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாகக் கூறப்போனால் எந்தத் தொழில்நுட்பத் துறைகளிலும் இளநிலைப்பட்டம் பெற்றவர்களும் அனைத்து அறிவியல் துறைகளில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களும் வெளிநாட்டில் மேற்படிப்பு தொடரத் தடங்கல் இல்லை. ஆனால், நிதி உதவி ஒரு சில துறைகளில் மட்டுமே கிடைக்கும். அதுவும் ஒரு சிலருக்கு மட்டுமே கிட்டும். தரம் வாய்ந்த கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு இந்த வாய்ப்புகள் அதிகம்.

இறுதியாகக் கணிப்பொறித்துறையில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு ஒரு அறிவுரை. தற்போது கணிப்பொறித்துறையின் பாடங்கள் கற்கப் பெருமளவுக்கு மோகம் வளர்ந்து வருவதைக் காண்கிறோம். ஒரு வகையில் இந்த மோகத்தின்அடிப்படைக் காரணம் உடனுக்குடன் வேலை வாய்ப்பு உள்ளது என்பதுதான். அதே சமயம் ஒரு எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ளவேண்டும். கணிப்பொறி துறையை மட்டுமே கற்றவர்கள் அநேகமாக அடிமட்டப்பணிகளிலே பல காலம் தேங்கி விடுவார்கள். மேற்கொண்டு உயர் பதவிப் பொறுப்புகளுக்கு முன்னேற்றம் காணவேண்டுமானால் கணிப்பொறி வல்லமையோடு ஏதாவது மற்றொரு அறிவியல், வணிகவியல், பொருளியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளை நன்கு கற்றறிந்திருப்பது இன்றியமையாதது. ஆதலால் கணிப்பொறித் துறையை மட்டுமே தேடி அலைவதை விட்டு, மற்ற எந்தத் துறையையாவது படிப்பதற்கு முயற்சி செய்து, அதனுடன் கணிப்பொறிப் பாடத்தையும் கற்பது அதிக நன்மைஅளிக்கும்.

## 17,வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்கள்

### ஃபேஷன் டெக்னாலஜி ( FASHION TECHNOLOGY)

கல்விக் கருத்தரங்குகள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்களின் ஆய்வின்படி பேஷன் டெக்னாலஜி படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பைத் தேடித்தரும் பயிற்சியாக கருதப்படுகிறது. எனவே, மாணவர்கள் National Institute of Fashion Technology (NIFT) பயிற்சி நிலையங்களை அணுகி இதற்கான பயிற்சியினை மேற்கொள்ளலாம். இது இரண்டு பட்டயப் படிப்பாகும்.

இந்தியா முழுவதும் 7 நகரங்களில் இக்கழகத்தின் பயிற்சி நிலையங்கள் உள்ளன. மாணவரின் சேர்க்கை நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் நடைபெறும். முழு நேரப் படிப்பில் சேர இயலாதவர்களுக்கும், இடம் கிடைக்காதவர்களுக்கும் மாலை நேர வகுப்புகளை (NIFT) நடத்துகிறது. மாலை நேரப் பயிற்சி வகுப்புகளின் காலம் 6 மாதம் முதல் 8 மாதம் வரையாகும்.
படித்து முடித்தவுடனேயே பல்வேறு உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு நிறுவனங்களில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. சென்னை எழும்பூரில் உள்ள இதன் அலுவலகத்தில் அணுகி இதன் விவரங்களைப் பெற முடியும். இப்பயிற்சியில் சேர்ந்து பயில 12வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

### சிஃப்நெட்

**General Institute of Fisheries Nautical and Engineering Training (CIFNET)**என்ற நிறுவனம் ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கப்பலைச் செலுத்தும் பயிற்சியை அளிக்கிறது. 10வது அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 17 முதல் 20 வயதுக்குள் இருக்கவேண்டும். பொதுவாக, நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. ஆழ்கடல் மீன்பிடிக்கும் கப்பல் ஓட்டுநர் பயிற்சியின் காலம் 18 மாத காலமாகும்.

ஆழ்கடல் மீன்பிடிப்புத் தொழிலுக்கு பொதுவாகவே நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நல்ல வரவேற்பு இருந்து வருவதால் இப்பயிற்சி முடித்தவுடனேயே நல்ல வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பொதுவாக மீன்பிடிக் கப்பலில் சேருபவருக்கு நல்ல ஊதியம் கிடைப்பதோடு, கிடைக்கும் லாபத்திற்கேற்றவாறு ஊக்கத்தொகை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. இப்படிப்புகள் குறித்த விவரங்களை சென்னை இராயபுரத்தில் உள்ள பயிற்சிப் பள்ளியில் அணுகி இதன் விவரங்களைப் பெறமுடியும்.

### கேட்டரிங் டெக்னாலஜி ( CATERING TECHNOLOGY)

ஹோட்டல் மேனேஜ்மென்ட் போன்ற படிப்புகளுக்குச் சமீப காலத்தில் மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. ஏனெனில், படித்து முடித்தவுடனேயே நல்ல வேலை வாய்ப்புகள் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இது மூன்று ஆண்டு டிப்ளமோ படிப்பு. இப்பயிற்சியில் சேர +2 அல்லது அதற்கு இணையான தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும். 22 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுகிறது. சென்னை தவிர இந்தியாவில் 13 இடங்களில் இந்தக் கல்வி நிறுவனம் இயங்கி வருகிறது. மேலும், மாணவர்களும் தங்குவதற்கேற்ப விடுதி வசதிகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

### ஆயத்த ஆடைகள் வடிவமைப்புப் பயிற்சி மையம்

நவீன தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்தி ஆயத்த ஆடைகள் வடிவமைப்புப் பயிற்சி மையம் (Apparel Training and design Centre / ATDC) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையம் 8வது, 10வது மற்றும் 12வது படித்தவர்களுக்கேற்றவாறு 6 மாதப் பயிற்சி படிப்பு, 3 மாதப் பயிற்சி படிப்பு என்று பல கல்வித் திட்டங்களைக் கொண்டுள்ளது. இப்பயிற்சிகள் அனைத்தும் மே மாதம் முதல் மாலைநேர வகுப்புகளாகவும் நடத்தப்படுகிறது.

ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிலகங்களுக்குச் சென்று அங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பயிற்சிகளை அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இப்பயிற்சி முடித்தவுடனேயே வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது.

## சிபெட் ( CIPET)

பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர், அறிவியல் பட்டதாரிகள், பொறியியலில் பட்டப்படிப்பு மற்றும் பட்டயம் பெற்றவர்களுக்கான தொழிற் பயிற்சிகளைஅளிப்பதில், முன்னணியில் இருக்கும் அரசு நிறுவனம் மத்திய பிளாஸ்டிக் மற்றும் பொறியியல் தொழில் நுட்பக் கழகம் **(CIPET).** இக்கழகத்தில் அளிக்கப்படும் பயிற்சிகள் அனைத்தும் சர்வதேச தரம் வாய்ந்தவை. இந்நிறுவனம் மாணவர்களின் தகுதிக்கேற்றவாறு பல்வேறு நீண்ட கால பயிற்சிகளையும் குறுகிய கால பயிற்சிகளையும் அளிக்கிறது. நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுகிறது.

## பாலிடெக்னிக்

10வது படித்த மாணவர்கள் பாலிடெக்னிக்கில் சேர அனுமதியுண்டு. இந்த டிப்ளமோ படிப்புக்காலம் சுமார் மூன்று ஆண்டுகளாகும். +2 படித்த மாணவர்கள் பாலிடெக்னிக்கில் இரண்டாம் ஆண்டு நேரடியாக சேரலாம்.

பாலிடெக்னிக் படித்தவர்கள், பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு சேர அனுமதிக்கப்படுவர். இதற்கு நுழைவுத் தேர்வு கிடையாது. இவ்வாறு பாலிடெக்னிக் படித்து வெளிவரும் மாணவர்களுக்கும் வேலை வாய்ப்பு உள்ளது.

## அழகுக்கலைப் பயிற்சி

தற்போது தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அழகுக்கலை பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் அந்த மையங்களில் தொடர்பு கொண்டு அதற்கான 3 மாதம் மற்றும் 6 மாத பயிற்சிகளை மேற்கொண்டால், பல அழகுக்கலை மையங்களிலும், ஹோட்டல்களில் உள்ள அழகுக்கலை மையங்களிலும் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், அவர்கள் இத்துறையில் சுய தொழில் மூலம் ஊதியம் பெறவும் வாய்ப்புகள்உண்டு. இவர்கள் 10வது தகுதி பெற்றிருந்தால் போதுமானது.

## உணவுத் தொழில் நுட்பம் மற்றும் உணவக மேலாண்மை பயிற்சிகள்

உணவுத் தொழில் நுட்பம் மற்றும் உணவக மேலாண்மை தொடர்பாக பின்வரும் 5 வகையான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

1.உணவு தயாரித்தல்
2.விடுதி பராமரித்தல்
3.உணவு மற்றும் பானம் பரிமாறுதல்
4.விடுதி வரவேற்பு அலுவல்
5.பேக்கரி மற்றும் கன்பெக்ஷனரி

மேற்காண் பயிற்சிகளை பெறும் பயனாளிகள் நட்சத்திர அந்தஸ்து பெற்ற உணவகம் மற்றும் விடுதிகளில் பணியாற்ற வழிவகை உள்ளது. இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் பிரபலமான உணவகங்களில் உள்ள கட்டமைப்பு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தத் தகுதிகளின் மூலம் இவர்களுக்கு எளிதில் நல்ல ஊதியத்துடன் வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. பயிற்சியின் காலம் 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்களாகும். +2 தேர்ச்சி போதுமானது. வயது வரம்பு 25க்குள் இருக்க வேண்டும்.

## அழைப்பு மைய பயிற்சி (CALL CENTER TRINING)

தற்போது தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அழைப்பு மையம் பயிற்சிகள் (call Center Training) நடத்தப்படுகின்றது, பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள் இம்மையங்களில் தொடர்பு கொண்டு அதற்கான பயிற்சியினை மேற்கொண்டால் இவர்களுக்கு எளிதில் நல்ல ஊதியத்துடன் வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது.

## பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்குபவர் பயிற்சி

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு இன்றைய உலகில் தவிர்க்க இயலாத ஒன்றாகும். பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்திச் செலவு மிகக் குறைவாக உள்ளதால் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களின்அன்றாட உபயோகப் பொருட்களில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு முக்கியத்துவம் உண்டு. எனவே, பிளாஸ்டிக் உற்பத்தி தொழிற்சாலைகள் அதிகரித்து வரும் நிலையில் இப்பயிற்சி பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பு எளிதில் அமைகிறது. பயிற்சியின் கால அளவு 6 மாதங்களாகும். கல்வித் தகுதி +2 தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 30க்குள் இருக்கவேண்டும்.

<u>தோல்பொருட்கள் தயாரிப்பில் குறுகிய கால பயிற்சிகள்</u>

பெரும்பாலான மக்கள் தோலினால் செய்யப்பட்ட காலணிகள் பெல்ட், தோல்பைகள், பர்ஸ்கள், கைப்பைகள் முதலியவற்றைப் பரவலாக அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஓராண்டு காலப் பயிற்சித் திட்டத்தில் 3 மாதங்களுக்கு மேற்பட்டு தோல்பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியை முடித்தப்பின் மாணவர்களின் திறமையைப் பொறுத்து பயிற்சிபெற்ற தொழிற்சாலைகளிலேயே வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. ஓராண்டு அல்லது 2 ஆண்டு அனுபவத்திற்குப் பிறகு மேற்பார்வையாளராகப் பணி பெறமுடியும். பயிற்சியின் காலஅளவு 12 மாதங்களாகும். கல்வித் தகுதி +2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 30க்குள் இருக்க வேண்டும்.

<u>ஆட்டோமொபைல், ஏர்-கண்டிசனிங் மெக்கானிக் பயிற்சிகள்</u>

பெரும்பாலான மக்கள் தங்களது இல்லங்களில் மற்றும் அலுவலகங்களில் ரெப்ரிஜேட்டர் மற்றும் ஏர்கண்டிசன்களைப் பரவலாகப் பயன்படுத்தி வருகிறார்கள்

மேலும் இரு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட இதர போக்குவரத்து சாதனைங்களைப் பெரும்பாலான மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, மேற்கூறிய சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கி சரி செய்து தரப்படும் வேலை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இது தொடர்பாக பயிற்சிகளைப் பெறுபவர்களுக்கு உடனடியாக சொந்தமாக சுயதொழில் அல்லது பல்வேறு மெக்கானிக் நிலையங்களில் வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது. ஆட்டோமொபைல் பயிற்சியின் காலஅளவு 12 மாதங்களாகும். ஏர்கண்டிசனிங் ரெப்ரிஜிரேஷன் பயிற்சியின் கால அளவு 6 மாதங்களாகும். கல்வித் தகுதி 10வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 30க்குள் இருக்கவேண்டும்.

<u>கட்டிட உள் அலங்காரப் பயிற்சி</u>

தற்போதைய நவீனயுகத்தில் வீடு, அலுவலகம், நட்சத்திர விடுதி ஆகியவற்றின் உள்பகுதியில் அலங்காரம் செய்து வருவது மிக முக்கியமான ஒன்றாகும். இத்தொழிலில் பயிற்சி பெறுவோருக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைத்து வருவதால் இப்பயிற்சியினை நடப்பு நிதியாண்டு முதல் இத்துறை நடத்தி வருகிறது. தற்போது சென்னை, கோயமுத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் மட்டும் இப்பயிற்சி திட்டம் 200 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ

மாணவியருக்கு நடத்தப்பட்டு வருகிறது. கல்வித் தகுதி 10வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். பயிற்சியின் காலஅளவு 6 மாதங்களாகும். வயது வரம்பு 30க்குள் இருக்க வேண்டும்.

<u>மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சி</u>

மனித உடலில் இரத்தம், சிறுநீர், மலம் போன்றவற்றை பரிசோதித்து நோயின் தன்மையை அறிந்து கொள்ள மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சி பயனளிக்கிறது. பயிற்சி முடிந்தவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளிலும் அரசாங்கப் பணியிலும் வேலை வாய்ப்பு எளிதில் கிடைக்கின்றது. சொந்தமான மருத்துவ ஆய்வுக்கூடம் அமைப்பதற்கும் இப்பயிற்சி பயனுள்ளதாக அமைகிறது. கல்வித் தகுதி 12 வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். பயிற்சியின் கால அளவு 12 மாதங்களாகும். வயது வரம்பு 17 முதல் 25க்குள் இருக்கவேண்டும்.

<u>மோட்டார் ரீவைண்டிங், ப்ளம்பர், தொலைக்காட்சி, தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சி</u>

வளர்ந்து வரும் உலகில் பல வகையான மின்சார/மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, இப்பொருட்களைப் பழுது நீக்கும் பயிற்சிகளைப் பெறுபவர்களுக்கு தனியார் நிறுவன வேலை வாய்ப்பும், சொந்தமாக மின்சார மின்னணு சாதனங்களை பழுது நீக்கும் மையங்கள் அமைப்பதற்கும் இப்பயிற்சி பயனுள்ளதாக உள்ளது. பயிற்சிகள் அவரவர்களின் தகுதிகளுக்கேற்ப 3 மாதம், 6 மாதம் மற்றும் 1 வருட காலத்திற்கு வழங்கப்படுகிறது. 10வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 32க்குள் இருக்க வேண்டும்.

ஆடை உற்பத்தி தொழில் நுட்பவியல் பயிற்சி நவீன ஆடை மாதிரி தயாரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பில் பட்டயப்பயிற்சி உற்பத்தி மேற்பார்வையாளர் பயிற்சி துணிவெட்டும் நிபுணர் பயிற்சி.

சமீப காலத்தில் பெரும்பாலோனார் ஆயத்த ஆடைகளை அணிவதில் அதிக அக்கறை காட்டி வருவதால் ஆடை அலங்காரம் மற்றும் ஆடை உற்பத்தி தொழில் அன்றாடம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதனால் ஆடை உற்பத்தித் தொழிலில் பயிற்சி பெறுபவர்களுக்குப் பெரிய நிறுவனங்கள் மற்றும் சிறிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. பயிற்சிகள் அவரவர்களின் தகுதிகளுக்கேற்ப 3 மாதம், 6 மாதம், மற்றும் 1 வருட காலத்திற்கு வழங்கப்படுகிறது. 10வது தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 32க்குள் இருக்க வேண்டும்.

**<u>தெற்காசிய கூட்டமைப்பின் மதன்ஜித்சிங் உதவித்தொகை</u>**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிக்கும் மாணவ, மாணவியர் இந்த உதவித்தொகையை பெற விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இந்த கூட்டமைப்பில் மாணவர்கள் உறுப்பினரானவுடன் வழங்கப்படும். தெற்காசிய கூட்டமைப்பில் உறுப்பினராவதற்கு மாணவர்கள் கீழ்க்கண்ட தகுதிகளை உடையவர் என்ற உறுதிமொழியில் கையொப்பமிட வேண்டும்.

இதில் ரூ.4500/- உதவித் தொகையாக ஓராண்டிற்கு வழங்கப்படும்.

**<u>மதன்ஜித்சிங் உதவித்தொகை பெறத் தேவையான தகுதிகள்</u>**

1. மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கின்ற நாளன்று 30 வயதைக் கடந்தவராக இருக்கக் கூடாது.
2. மாணவர்களுடைய பெற்றோர்களின் வருடாந்திர வருமானம் ரூ.1,20,000/-க்கு மேல் இருக்கக் கூடாது.
3. மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது அவர்களுடைய கடந்த காலக் கல்வித்தகுதியை பொறுத்தது.
4. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் தெற்காசியக் கூட்டமைப்பு இணைந்து தகுதியுடைய மாணவ, மாணவியர்களை இறுதியாகத் தேர்ந்தெடுக்கும்.
5. தெற்காசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவு இறுதியானது. இது தொடர்பாக வேறு எவரும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது.
6. மாணவர்கள் கொடுத்த விவரங்கள் தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடைய உதவித்தொகை உடனடியாக இரத்து செய்யப்படும்.
7. மாணவர்கள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்களில் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.
8. இரண்டாம் வருடத்திற்கான உதவித்தொகை அவர்களுடைய செயல்பாடு மற்றும் நன்னடத்தையை பொறுத்தது.

## கணிப்பொறிக் கல்வி

கணிப்பொறித்துறையில் ஆர்வம் காட்டும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. ஒரு வகையில் இதற்கு அடிப்படைக் காரணம் கணினி படித்த மாணவர்களுக்கு உடனுக்குடன் வேலை வாய்ப்பு உள்ளது என்பது தான். அது மட்டுமல்லாமல் கணினியின் பயன்பாடு இன்று எல்லாத் துறைகளுக்குமே தேவைப்படுகின்றது. ஆகையால் கணினியைப் பாடமாகப் படிக்கப் பெரும்பாலான மாணவர்களுக்கு ஆர்வம் இருந்து வருகின்றது. +2 மாணவர்கள் பி.சி.ஏ. போன்ற கணினி பயன்பாடு பற்றிய படிப்பினை தொடரலாம். எம்.சி.ஏ. போன்ற கணினி படிப்பினை பி.சி.ஏ முடித்துவிட்டுத் தொடருவதற்கும் வாய்ப்பு உள்ளது. வேலையிலிருந்து கொண்டே கணினி பயன்பாடு சம்பந்தமான பாடங்களைப் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திலேயே படிக்கலாம்

### தகவல் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி


பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

**&**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
எழிலகம் விரிவாக்கக் கட்டிடம்
இரண்டாவது தளம், சேப்பாக்கம், சென்னை-600 005.

தொலைபேசி எண்கள் 28511124 , 28551442
**Fax: 28552642**
தொலைபேசி எண்கள் 28546193 , 28410042
**Fax: 28546193**
**E-Mail: 1) dir-bcmw @ tn.nic.in**
**2) dir-mbc @ tn.nic.in**